# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 413

சனி, 17 ஒக்ரோபர், 2026 | பக்கங்கள் 16

www.ilakku.org










# மயிலத்தமடு பண்ணையாளர்களின் கால்நடைகள் மீது துப்பாக்கிச்சூடு



மட்டக்களப்பு: மயிலத்தமடுவில் மேய்ச்சலுக்காகச் சென்ற பசுக்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் திரும்பியுள்ளதாக பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். பசுக்கள் கடந்த 14ம் திகதி மேய்ச்சலுக்காக சென்ற நிலையில் நேற்று முந்தினம் காயங்களுடன் திரும்பியதாக தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைப் பிரச்சினை மிக நீண்டகாலமாக நிரந்தரத் தீர்வின்றி தொடர்கதையாகவே நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இதனால் அப்பகுதியில் தொடர்ச்சியாக கால்நடைகளை வளர்த்து வரும் பண்ணையாளர்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலும், அச்சத்தின் மத்தியிலும் அவர்களது வாழ்வாதாரமாகவுள்ள கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினர், சட்டத்தரணிகள், மனித உரிமை ஆர்வலர்கள், அரச உயரதிகாரிகள் உள்ளிட்ட பலரும் அப்பகுதிக்கு நேரடி விஜயம் செய்து நிலைமையை பார்வையிட்டனர்.

பண்ணையாளர்களிடமும் நிலைமை குறித்து கேட்டறிந்திருந்தனர். இந்நிலையில் மேய்ச்சலுக்காகச் சென்ற பசுக்கள்

தொடர்ச்சி: பக்கம் 14

## கரியல் வயல் பகுதியில் வனஜீவராசிகள் திணைக்களத்தால் அபகரிக்கப்பட்ட மக்களின் வயற்காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்

**ரவிகரன் நா.உ. வலியுறுத்தல்**



முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட அம்பலவன் பொக்கணை, கரியல் வயல் பகுதியில் வனஜீவராசிகள் திணைக் களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்க ளின் பூர்வீக வயற்காணிகள் விடுவிக்கப் படுவதுடன், கரியல் குளமும் சீரமைக்கப்பட வேண்டும் என நாடாளு மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரி வித்துள்ளார்.

அதேவேளை கரியல்வயல் பகுதி யில் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வயற் காணிகளை விடுவிப்பதுதொடர்பிலும், கரியல் குளத் தினை சீரமைப்பது தொடர்பிலும் தம்மால் உரியதரப்பினருக்கு தொடர் அழுத்தம் பிரயோகிக்கப்படும் எனவும் ரவிகரன் இதன்போது

தொடர்ச்சி: பக்கம் 14

## கொழும்பு துறைமுகத்தை நவீனமயப்படுத்த 17 மில்லியன் டொலர் முதலீடு – அமெரிக்கா அறிவிப்பு



கடல்சார் வர்த்தகத்தில் செயல்திறனை மேம்படுத்தி, தாமதங்களையும் செலவு களையும் குறைக்கும் நோக்கில், கொழும்பு துறைமுகத்தின் செயல்பாடுகளை டிஜிட் டல் மயமாக்குவதற்காக 17 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டை அமெரிக்கா இன்று (16) அறிவித்துள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபையுடன் (SLPA) இணைந்து நடை முறைப்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் கீழ், துறைமுகச் செயல்பாடுகளைச் சீரமைத்து, உலகளாவிய வர்த்தகத்தில் இலங்கையின் பங்கை வலுப்படுத்தும் வகையில் புதிய டிஜிட்டல் கட்டமைப்புகள் அறிமுகப் படுத் தப்படவுள்ளன.

அமெரிக்காவின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் இத்திட்டம், ஒன்றோ டொன்று இணைக்கப்பட்ட இரண்டு அமைப்புகளான கடல்சார் ஒற்றைச் சாளர அமைப்பு

தொடர்ச்சி: பக்கம் 14

# ஐபோன்களை ஏற்றிச் சென்ற கப்பல் ஹோர்முஸ் நீரிணையில் மூழ்கியது




நவம்பரில் நடைபெறவுள்ள அமெரிக்க இடைக்காலத் தேர்தலுக்கு முன்னதாக கச்சா எண்ணெய் விலையை உயர்வாகவே வைத்திருக்க, ஹார்முஸ் நீரிணை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வணிகக் கப்பல்கள் மீதான தாக்குதல்களைத் தீவிரப்படுத்த ஈரான் புதிய உத்திகளைக் கையாண்டு வருகிறது. பெயர் குறிப்பிட விரும்பாத இரண்டு மூத்த ஈரானிய அதிகாரிகளை மேற்கோள் காட்டி ரொ ய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த உத்தியில், அடிக்கடி தாக்குதல் நடத்துவது மற்றும் ஓமன் வளைகுடா, கத்தார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு அருகிலுள்ள கடல் பகுதிகள் வரை செயல்பாட்டு எல்லையை விரிவுபடுத்துவது ஆகியவை அடங்கும். மூடிஸ் அனலிட்டிக்ஸ் (Moody's Analytics) தரவுகளின்படி, பிப்ரவரி மாத இறுதியில் தொடங்கிய ஈரானுடனான மோதல் சூழலால் அமெரிக்க நுகர்வோருக்கு சுமார் 265 பில்லியன் டாலர் செலவாகியுள்ளது; இது ஒரு வீட்டிற்கு சராசரியாக 2,000 டாலர் செலவாகும். அந்தச் செலவில் சுமார் 1,100 டாலர் எரிசக்தி விலை உயர்வால் ஏற்பட்டது; போருக்கு முன் ஒரு கேலன் பெட்ரோலின் விலை 2.98 டாலராக இருந்த நிலையில், தற்போது அது சராசரியாக 4.34 டாலராக உயர்ந்துள்ளது.

அனுமதிக்கப்படாத பாதையின் வழியாக ஹார்முஸ் நீரிணையைக் கடக்க முயன்றபோது, 2,500-க்கும் மேற்பட்ட கொள்கலன்களை (containers) ஏற்றிச் சென்ற ஒரு கப்பல் கடலடியில் புதைக்கப்பட்ட கண்ணிவெடியில் (naval mine)

தொடர்ச்சி: பக்கம் 09

## அமெரிக்க நன்கொடையாளர்கள் 'கரப்பான் பூச்சி' இயக்கத்துக்கு நிதியுதவி



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை எதிர்க்கும் அமெரிக்க நன்கொடையாளர்கள், நாட்டின் இளைஞர்கள் தலைமையிலான 'கரப்பான் பூச்சி' போராட்ட இயக்கத்திற்கு நிதியுதவி அளித்து வருவதாக அமெரிக்கப் பாடகி மேரி மில்பென் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், அமைதியான எதிர் இயக்கத்திற்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். புது டெல்லியில் நடந்த போராட்டத்தைத் தொடர்ந்து, அந்த அமைப்பின் இரண்டு தலைவர்களுக்கு ஐந்து நாட்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், அவரது இந்தக் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

பெயர் குறிப்பிடப்படாத அமெரிக்க நன்கொடையாளர்கள், கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் (CJP) நிறுவனர் அபிஜீத் திப்கே மற்றும் அவரது இயக்கத்திற்கு நிதியுதவி அளித்து வருவதாக மில்பென் புதன்கிழமை அன்று X தளத்தில் பதிவிட்டுள்ளார். இத்தகைய நன்கொடையாளர்கள், தங்கள் சொந்த நாடுகளில் உள்ள பழமைவாதத் தலைவர்களுக்கு சவால் விடுவதற்காக, அமெரிக்காவில் கல்வி கற்ற ஆர்வலர்களைத் திரட்டும் ஒரு வழக்கத்தைப் பின்பற்றுவதாக அவர் கூறினார்.

முன்னதாக, வெளிநாட்டு நிதியுதவி குற்றச்சாட்டுகளை திப்கே நிராகரித்தார். CJP அமைப்பாளர்களும் நண்பர்களும் போராட்டங்களுக்கு நிதியளிக்கப் பணம் திரட்டுவதாக அவர் கூறினார்.

இந்த அமெரிக்கப் பாடகி, ஜூன் 2023-ல் மோடி அமெரிக்காவுக்கு மேற்கொண்ட அரசுமுறைப் பயணத்தின்போது, வொஷிங்டன் டி.சி-யில் நடைபெற்ற, புலம்பெயர்ந்த இந்தியர்கள் கலந்துகொண்ட ஒரு நிகழ்வில் இந்தியாவின் தேசிய கீதத்தைப் பாடினார். அமெரிக்காவிலிருந்து வரும் சீர்குலைக்கும் சக்திகளுக்கு இந்தியப் பிரதமர்

தொடர்ச்சி: பக்கம் 14

## செயற்கை நுண்ணறிவு வீட்டு உபகரணங்களில் தன்னிச்சையாகப் பரவுகிறது




செயற்கை நுண்ணறிவு மாதிரிகள், இந்த ஆண்டின் இறுதிக்குள் ஸ்மார்ட் டிவிகள் மற்றும் அடுப்புகள் உள்ளிட்ட வீட்டு உபகரணங்களில் தன்னிச் சையாகத் தொற்றை ஏற்படுத்திப் பரவும் திறன் பெறக்கூடும் என்று அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனமான ஆந்த்ரோபிக் எச்சரித்துள்ளது.

திங்களன்று(12) வெளியிடப்பட்ட ஒரு ஆய்வறிக்கையில், தனது கிளாட் ஏஐ சாட்பாட்டிற்காக நன்கு அறியப்பட்ட இந்நிறுவ னம், இணையத்துடன் இணைக்கப்பட்ட சாதனங்களில் "சிறிய ஏஐ மாதிரிகள் தங்களைத் தாங்களே பெருக்கிக்கொள்ளும் திறனைப் பெற இன்னும் சில மாதங்கள் ஆகலாம்" என்று சோதனைகள் சுட்டிக்காட்டுவதாகக் கூறியுள்ளது.

"அவற்றை நிறுத்துவதற்கு மையப்படுத்தப்பட்ட புள்ளி எதுவும் இருக்காது" என்ப தால், அத்தகைய "ஏஐ புழுக்களை" ஒழிப்பது கடினமாக இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள்

தொடர்ச்சி: பக்கம் 09

## எரிசக்தி அதிர்ச்சிகளால் மேற்கத்திய நாடுகள் பாதிப்பு – IMF



மத்திய கிழக்கு மோதல் உலகளாவிய விநியோகத்தைப் பாதிப்பதாலும், அதி கரித்து வரும் பொதுக் கடன் அதன் தாக்கத் தைத் தணிக்கும் அரசாங்கங்களின் திற னைக் கட்டுப்படுத்துவதாலும், மேற்கத் தியப் பொருளாதாரங்கள் மேலும் ஏற்படக் கூடிய எரிசக்தி அதிர்ச்சிகளுக்கு அதிகள வில் பாதிக்கப்படக்கூடியவையாக மாறி வருகின்றன என்று சர்வதேச நாணய நிதி யம் (IMF) எச்சரித்துள்ளது.

செவ்வாயன்று வெளியிடப்பட்ட(13) தனது சமீபத்திய உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில், நீடித்த மத்திய கிழக்கு மோதல் எரிசக்தி சந்தைகள் மீது மேலும் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது என்றும், ஐரோப்பிய எரிவாயு இருப்புகள் 15 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் குறைந்துள்ளன என்றும் IMF எச்சரித்துள்ளது.

"எரிசக்தி சந்தைகளில் இருப்புக்கள் குறைந்து வருகின்றன, மேலும் கூடுதல் புவிசார் அரசியல் அதிர்ச்சிகள் விலைகள் மற்றும் விநியோகத் தடைகள் மூலம் இன்னும் வேகமாகப் பரவக்கூடும்," என்று அந்த அறிக்கை கூறியது. சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்கள் போருக்கு முன்பு இருந்ததை விட 70% முதல் 95% வரை விலை அதிகமாகவே

தொடர்ச்சி: பக்கம் 14

# தொடரும் மழையால் ஸ்தம்பிக்கும் ஹட்டன் கல்வி வலயம்



எல் நினோ தாக்கம் காரணமாக, இலங்கையின் மத்திய மாகாணம் உள்ளிட்ட பல பகுதிகளில் தொடர்ச்சியாக மழை வீழ்ச்சி பதி வாகி வருகின்றது.

இவ்வாறு தொடர்ச்சியாக மழை பெய்யும் சந்தர்ப்பங்களில், மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள ஹட்டன் கல்வி வலயம் அடிக்கடி பாதிப்புகளை எதிர்கொள்கின்றது.

குறிப்பாக, மழை பெய்யும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஹட்டன் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படுகின்றது. ஹட்டன் கல்வி வலயத்துக்குட்பட்ட பெரும் பாலான பாடசாலைகள் வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு போன்ற அனர்த்தங்களால் பாதிக்கப்படக்கூடிய சூழலில் அமைந் துள்ளமையே இதற்குக் காரணமாகும்.

அதேநேரம், உரிய வடிகால் அமைப்புத் திட்டம் இல்லாத காரணத்தால், சிறிய அளவில் மழைவீழ்ச்சி பதிவாகும் சந்தர்ப் பங்களில்கூட ஹட்டன் நகரம் வெள்ளத்தில் மூழ்கும் நிலை காணப் படுகின்றது.

இந்நிலையில், ஹட்டன் வலயக் கல்வி அலுவலகக் கட்டடத்துக்குள் மழைநீர் ஒழுகுவதால், தங்களால் முறையாகப் பணிகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாகத் தெரிவித்து, அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலை நிலவும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஹட்டன் வலயக் கல்வி அலுவலகக் கட்டடத்துக்குள் மழைநீர் ஒழுகுவதால், அன்றாட அலுவலகப் பணி களை முன்னெடுப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, அலுவலகத்துக்குள் மழைநீர் புகுவதால் முக் கிய ஆவணங்கள் நனைந்து சேதமடையும் அபாயம் காணப்படு வதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் பணியாற்றும் சுமார் 21 உத்தியோகத்தர்கள், 48 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட இடத்தில் தமது பணிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேசைகள், கதிரைகள் மற்றும் அலுமாரிகள் உள்ளிட்ட அலுவலக உபகரணங்கள் காணப்படும் இந்த இடத்தில், போதிய வசதிகளின்றிப் பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும், மாதாந்தம் சுமார் 3,048 அதிபர்கள் மற்றும் ஆசிரியர் களுக்கும், 90 உத்தியோகத்தர்களுக்கும் சம்பளம் வழங்குவதற்கான கணக்குப் பணிகளை இந்தப் பிரிவே முன்னெடுத்து வருகின்றது.

இவ்வாறான முக்கிய பொறுப்புகளை நிறைவேற்றும் நிலையில், பொருத்தமான பணிச்சூழல் இல்லாமை பெரும் சிரமத்தை ஏற்படுத்துவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், பல்வேறு கலந்துரை யாடல்கள் இடம்பெற்றுள்ள போதிலும் இதுவரை நிரந்தரத் தீர்வு கிடைக்கவில்லை என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட உத்தியோகத் தர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, மழைநீர் ஒழுகும் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு வழங்குவதுடன், பாதுகாப்பானதும் முறையானதுமான பணிச் சூழலை ஏற்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில், ஹட்டன் கல்வி வலயத்தில் நிலவும் இப்பிரச்சினை தொடர்பாக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழுத் தலைவருமான மஞ்சுள சுரவீரவிடம் வினவப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், ஹட்டன் வலயக் கல்வி அலுவலகத்துக்கு கடந்த வருடம் 65 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக் கப்பட்டதாகவும், இந்த வருடமும் 65 மில்லியன் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், காணிப் பிரச்சினை நிலவுவதால், இந்த அலு வலகத்தைத் தொழில் திணைக்கள வளாகத்தில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த மஞ்சுள சுரவீர, “ஹட்டன் கல்வி அலுவலகத்தின் பிரச்சினை என்பது இன்று நேற்றுத் தோன்றியதல்ல. இது சுமார் 1990ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் பிரச்சினையாகும். ஸ்ரீபாத வித்தியாலயத்தின் சிறியதொரு இடத்திலேயே இந்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. மழை பெய்யும்போது இந்த அலுவலகம் நனைகின்றது.

சுமார் 150இற்கும் அதிகமான பாடசாலைகளைக் கொண்டுள்ள இந்த அலுவலகத்தின் ஊடாக, 3,000இற்கும் மேற்பட்ட

**தொடர்ச்சி: பக்கம் 14**

# ஆசிரியர் தலையங்கம் | 17 ஒக்ரோபர், 2026

## நாடுகளைத் தழுவாது, மக்களைத் தழுவியே மக்கள் இறைமையைப் பாதுகாக்கலாம்

இன்று உலக அரசியல் ஒழுங்குமுறை அமெரிக்க அரசத்தலைவர் டொனால்ட் ட்ரம்ப் அவர்களாலும் இஸ்ரேலிய பிரதமர் நெத்தன்யாகு அவர்களாலும் முற்றாகச் சீர்குலைக்கப்பட்டுள்ளது. இந்நேரத்தில் ஈழத்தமிழர் போன்ற சிறுதேச இனங்கள் நாடுகளைத் தழுவாது மக்களைத் தழுவியே மக்கள் இறைமையைப் பாதுகாக்க வேண்டிய நிலை இயல்பாகியுள்ளது என்பதனை இலக்கு எடுத்துரைக்க விரும்புகிறது. ஐக்கிய நாடுகள் சபையும் அதன் கட்டமைப்புக்களான அனைத்துலக குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்துலக நீதிக்கான நீதிமன்றங்கள் மனித உரிமைகள் ஆணையகம் எல்லாமே சுதந்திரமாக தீர்மானம் எடுக்கும் நிலையை இழந்து வருகின்றன என்பது வெளிப்படையான உண்மை. ஆனால் ஈழத்தமிழர் புலம்பதிந்து வாழ்பவர்கள் முன்னைய முறையிலேயே நாடுகளைத் தழுவியே அனைத்துலக நீதியை தீர்வுகளை பெற முயற்சிக்கின்றனர் இவைகள் எந்த அளவுக்கு ஏற்புடைய பலனைத் தரும் என்பதை மீளாய்வு செய்ய வேண்டும் என்பது இலக்கின் இவ்வார கருத்தாக உள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி அவர்களின் ஆட்சிக்காலத்தின் இறுதிக்கட்டத்தில் ஈழத்தமிழர் தேசிய விடுதலைப் போராட்டம் இந்தியாவின் தன்னைத் தனது தனித்துவத்துடன் பாதுகாப்பதற்கான (Protectionism) திட்டங்களுக்கு தேவையான ஒன்றாக அமைந்தது. இதனால் ஈழத்தமிழர் தேசிய விடுதலைப்போராட்டம் ஆயுதம் தாங்கிய போராளிகள் போராட்டமாகப் பரிணாமமடைந்தது வரலாறு. ஆனால் இன்று உலக அரசியல் ஒழுங்குமுறை இல்லாமல் போயுள்ள நிலையில் இந்தியாவுக்குச் சர்வதேச முறைமைக்குள் தன் நிலையைப் பேணல் என்கின்ற வகையில் இந்திய வெளிவிவகாரக் கொள்கைகள் கட்டமைக்கப்படுகின்றன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் முனைவர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் அவர்கள் Bloomberg ஊடக செய்தித்துறை பிரதம ஆசிரியர் மைக்கலத்வெயிட் (Mickletwait) அளித்த பேட்டியில் மைக்கலத்வெயிட் 2020 இல் முனைவர் ஜெய்சங்கர் அவர்கள் எழுதிய “இந்திய வழி – உறுதியற்ற உலகுக்கான தந்திரோபாயங்கள்” (Indian Way – Strategies for uncertain world) என்னும் நூலில் எழுதியவாறு “ அமெரிக்காவுடன் Engage - ஈடுபாடு, சீனாவுடன் Manage - மேலாண்மை, ஐரோப்பாவுடன் cultivate பேணி வளர்த்தல் ரஷ்யாவுடன் reassure மீளுறுதி செய்தல் யப்பானுடன் - formulation உருவாக்கல் என்பது இந்திய வெளிவிவகாரக் கொள்கை எனச் சுருக்கமாகக் குறித்திருந்ததை வெளிப்படுத்தி செவ்வியைத் தொடங்கினார்.

இதுதான் ராஜதந்திரம். இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்ப ஏற்படும் பரிணாமத்தை புரிந்து அதற்கேற்ப நடந்தால்தான் அனைத்துலக தொடர்பாடலில் ஏற்புடைய பலனைப் பெற முடியும் என்பதை ஈழத்தமிழர்களாகிய நாம் புரிந்து நமக்கான அரசியல் கொள்கையில் உறுதியின் உறைவிடமாக உள்ளத்தில் நின்று கொண்டு பொருளாதாரக் கொள்கையை அனைத்துலகத்தவருடன் இணைந்து வாழத்தக்க வகையில் வரையறுக்க வேண்டும் என்பது இலக்கின் வேண்டுகோளாகவுள்ளது. ஏனெனில் இன்று பொருளாதாரத் தந்திரோபாயம்தான் ஒரு இனத்தை உலக இனம் மதித்து ஏற்பதற்கான திறவுகோலாக உள்ளது. இதற்கு ஈழத்தமிழரின் மனிதவலு மூலதனவலு மண்ணின் இயற்கைவலு துறைசார் நிபுணர்களால் பட்டியலிடப்படல் காலத்தின் தேவையாக உள்ளது. பின்னர் நாடுகளுடன் நாடுகள் இணைந்து செயற்படல் போல மக்களுடன் மக்கள் இணைந்து செயற்பட பொறுப்புள்ளவர்களாக உலக ஈழத்தமிழினம் உள்ளது.

மேலும் இனங்காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்தி ஒரு மண்ணின் இயற்கை வளத்தை மக்களின் மனிதவலுவை உழைப்பின் மூலதனத்தைச் சுரண்டல் என்ற வல்லாண்மைகள் பிராந்திய மேலாண்மைகளின் வழக்காகவுள்ளது. கடந்தவாரத்தில் அமெரிக்க அரசத்தலைவர் ஈரானுக்கு இந்த இனங்காணக்கூடிய அச்சத்தை ஊடகங்கள் வழி ஏற்படுத்தக் கூடிய முறையில் ஆங்கிலத்தில் ‘ Mother of All Bombs’ ‘குண்டுகளுக்கெல்லாம் தாய்க்குண்டு’ என்பதன் சுருக்கப் பெயராக MOAB என அழைக்கப்படும் அணுவாயுதமில்லாத ஆனால் மிக அதிக நிறையான 21600 இறாத்தல் நிறைக் குண்டான GBU-43/B வகைக் குண்டுகள் ட்ரம்பின் முதலாவது ஆட்சிக்காலத்தில் 2017 இல் ஆப்கானிஸ்தான் மலைப்பகுதியில் வீசப்பட்டது போல ஈரானின் அணுவாயுத தயாரிப்புக்கான மூலப்பாகங்கள் வைத்திருக்கும் பிக்அக்ஸ் (PICKAXE) மலைப்பகுதிகளில் நவம்பர் மாதம் 3ஆம் நாள் அமெரிக்க 2026ஆம் ஆண்டின் நடுப்பகுதி தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்னதாகவோ பின்னதாகவோ வீசப்படலாம் என ட்ரம்ப் எச்சரித்து வருகிறார் என்ற செய்தியினை அமெரிக்க சி.என்.என் தொலைக்காட்சி நிறுவனம் கடந்த வாரத்தில் தெரியப்படுத்தியுள்ளது.

ஈரானின் பாராளுமன்றச் சபாநாயகர் ஈரானால் அமெரிக்காவின் எத்தகைய தாக்குதலையும் எதிர்கொண்டு வெற்றிபெற முடியுமென தெரிவித்துள்ளமை ஈரான் மேலான அமெரிக்க இஸ்ரேல் கூட்டுப்போர் வெல்லப்பட முடியாதவொன்றாகவே தொடரும் என்பதனை உலகிற்குத் தெளிவுபடுத்தியுள்ளது. இதனால் உலகில் பணவீக்கமும் பொருட்கள் விலையேற்றமும் சாதாரண மக்களால் தாங்க இயலாத அளவுக்கு அதிகரிக்கிறது. அமெரிக்காவிலேயே 3.9 ஆகப் பணவீக்க அளவாக அதிகரித்துள்ளது. கூடவே எல் நினோ பசுபிக்கடல் வெப்ப நிலை ஈழத்தில் வெள்ளங்களையும் வறட்சிகளையும் மாறி மாறி ஏற்படுத்தலாம் என்பதால் விளைச்சல்கள் வீழ்ச்சியடைந்து பட்டினி நிலை ஏற்படலாம். இவற்றை எதிர்நோக்க மக்கள் நலனில் அக்கறையுள்ள அரசியல் செயற்பாட்டாளர்கள் ஈழம் உட்பட உணவு வங்கிகளை (Food Banks) உடன் ஏற்படுத்த வேண்டும் என்பது இலக்கின் அழைப்பாகவுள்ளது. மூத்த வயதினர் இளைய வயதினர் என்னும் இருநிலையிலும் மக்களின் நாளாந்த வாழ்வு பாதிக்கப்படாதவாறு பல்கலைக்கழகங்கள் துறைசார் நிபுணர்களை இணைத்து செயலமர்வுகளை ஏற்படுத்தி மக்கள் நலம் பேணும் மையங்களை எல்லா நகரங்களிலும் கிராமங்களிலும் ஈழத்தமிழர் தாயகப்பகுதிகளில் ஏற்படுத்த வேண்டிய உடன் தேவையுள்ளது என்பதையும் இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

மேலும் பறக்கும் காரை கடந்த வாரத்தில் அறிமுகம் செய்த பில்லியன் டொலர் செல்வந்தர் எலன் மஸ்க் குடியரசுக்கட்சிக்கு யூலை மாதம் வரை இந்த 2026ஆம் ஆண்டின் நடுவாண்டுத் தேர்தலுக்காக 276 மில்லியன் டொலர்களை வழங்கி முதலாவது இடத்தை நன்கொடை வழங்குவதில் பெற்றுள்ள நிலையில், உக்ரேன் ரஷ்ய போரில் உக்ரேன் ஏவும் தன்னியங்கு ட்ரோன்களின் வேகத்தை அமெரிக்கா கட்டுப்படுத்தலே அவை ரஸ்யாவை எதிர்பார்த்தவாறு தாக்கிச் சேதத்தை ஏற்படுத்த இயலாது உள்ளது என கடந்த வாரத்தில் வெளிப்படையாகவே கூறியுள்ளார். அதே வேளை ரஸ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதற்கு ட்ரம்ப் அமெரிக்க காங்கிரஸ் செனட் அனுமதியின்றி தன்னிச்சையாக ஒப்பந்தம் செய்ததும் ரஸ்யாவுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை தளர்த்தப் போவதாகக் கூறியதும் உக்ரேன் அரசத்தலைவர் செலென்ஸ்கி ரஸ்யா போரைத் தொடர்வதற்குப் பணம் கிடைக்கச் செய்யும் துரோகத்தனம் எனக் கூறியுள்ளார்.

அதே வேளை பிரித்தானிய பிரதமரையும் பிரான்சிய அரசத்தலைவரையும் சந்தித்த பொழுது இருவருமே உக்ரேனை தாங்கள் கைவிட மாட்டார்கள் என உறுதியளித்துள்ளனர். ஐரோப்பிய ஒன்றியமும் இத்தகைய உறுதியை வழங்கிய நிலையில் பல ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் செலென்ஸ்கி ஹங்கேரிக்கு நேரடியாகச் சென்றுள்ளமை புடாபெஸ்டின் உக்ரேன் ஆதரவு மீண்டுள்ளமையை வெளிப்படுத்தியுள்ளது. இவ்வாறு செலன்ஸ்கி ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் முழுவதிலும் நேரடியாகச் சென்று உதவிகோருவதை ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் அரசியல் முன்னுதாரணமாகக் கருதி, சமூக வலைத் தளங்களில் சட்பொட் இன்டிமேசி (Chatbot Intimacy) எனப்படும் ஆள்நிலைப்பட்ட உறவாடலின்றி சமூக வலைத்தளங்களையே தங்கள் நெருக்கமான உறவாக மாற்றாது முற்பதிவுக்குறிகளை (pre-dictated text) பயன்படுத்தித் துலங்கல்களை வெளிப்படுத்தாது மக்களிடம் சென்று மக்களுடன் பேசி உறவாடி தேவைகளை அறிந்து அவற்றைத் தீர்க்க வல்லனவற்றை செய்து அவர்களுடன் நட்பை வளர்த்து அந்தப் பின்னணியில் தேசஉருவாக்கத்தை ஜென்சி அல்பா இளையவர்களையும் உள்ளடக்கி செய்வதற்கான துறைசார் கட்டமைப்புகளையும் அவற்றுக்கான மதிநிதி வளங்களையும் அனைத்துலக ஈழத்தமிழர்கள் வளர்த்தாலே இன்றைய பொருளாதாரத் தந்திரோபாயங்களுக்கு ஏற்ப ஈழத்தமிழர்களை அனைத்துலக சமூகம் ஏற்று அவர்களின் இறைமையைப் பாதுகாக்க முன்வரும் என்பதே இலக்கின் உறுதியான கருத்து.

**ஆசிரியர்**




## விதுரன்

இலங்கையின் நவீன அரசியல் வரலாற்று நெடுகிலும் 'பௌத்த மதம்' மற்றும் 'சிங்கள தேசியம்' ஆகிய இரண்டும் சட்டத்தின் ஆட்சியைத் தீர்மானிக்கும் முதன்மைச் சக்திகளாக உருவெடுத்துள்ளன.

கடந்த சனிக்கிழமை முதல் வியாழக்கிழமை வரையில் ஆறு நாட்களாகக் கண்டியிலிருந்து கொழும்பு வரை முன்னெடுக்கப்பட்ட 'காவி உடைக்கு நீதி' பாதயாத்திரையும், ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்ற பிக்குகளின் போராட்டங்களும், அதன் தொடர்ச்சியாக ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்றக் கோரிக்கையும் இலங்கையின் ஜனநாயகக் கட்டமைப்பின் மீதான மற்றுமொரு பாரிய கேள்விக் குறியை ஏற்படுத்தியுள்ளன.



ஆரம்பத்தில் சிறைச்சாலை விதிமுறைகளில் பௌத்த பிக்குகளின் ஆடை உரிமைகள், கண்ணியம் சார்ந்த கோரிக்கையாகத் தொடங்கப்பட்ட போராட்டம், தற்போது சட்டத்தின் முன் தண்டனை பெற்ற ஒரு குற்றவாளிக்கு மதத்தின் பெயரால் விலக்குக் கோரும் தீவிர மதவாத அழுத்தமாக உருவெடுத்துள்ளது.

பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொடஅத்தே ஞானசாரதேரர், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மற்றும் மத நல்லிணக்கத்திற்குப் பாதகமான கருத்துக்களை வெளியிட்டமை தொடர்பில் சட்டரீதியான விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுத் தண்டனை பெற்றவர்.

2019ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவினால் அவருக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி பொதுமன்னிப்பு, அரசியல் சாசனத்திற்கு முரணானது மற்றும் தன்னிச்சையானதென நாட்டின் உயர் நீதிமன்றம் செப்டம்பர் 2026இல் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கி அதனை இரத்து செய்தது.



உயர் நீதிமன்றத்தின் இத்தீர்ப்பைத் தொடர்ந்து, ஞானசார தேரரின் எஞ்சிய தண்டனைக் காலத்தைச் நடைமுறைப்படுத்தவும், அவர் மீதான ஏனைய நிலுவை வழக்குகளுக்காகவும் மேல், மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் பிடியாணை பிறப்பித்தன.

இருப்பினும், உயர் நீதிமன்றத்தின் சட்டபூர்வமான இத்தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் அஸ்கிரிய, மல்வத்து ஆகிய பிரதான பீடங்களின் ஆதரவுடனும், சரத் வீரசேகர, அநுராதா யஹம்பத், சன்ன ஜயசுமன, உதய கம்மன்பில, விமல் வீரவன்ச போன்ற தீவிர தேசியவாத அரசியல்வாதிகளின் பின்னணியுடனும் 'காவி உடைக்கு நீதி' என்ற பெயரில் பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டது.

மகா சங்கத்தினரின் இந்த அழுத்தங்களுக்குப் பணிந்து, அரசாங்கம் உடனடியாகச் செயற்பட்டு சிறைச் சாலை நிலையியல் கட்டளை எண் 356 மற்றும் 550 ஆகியவற்றில் திருத்தங்களை மேற்கொண்டு, சிறையிலடைக்கப்படும் பிக்குகள் காவி உடை அணிவது மற்றும் அவர்களைக் கையாள்வது தொடர்பான புதிய விதி முறைகளை உருவாக்குவதற்கான பரிந்துரைகளை தயாரித்துள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார இது தொடர்பான இடைக்கால அறிக்கையை வெளியிட்டுள்ள போதிலும், போராட்ட தேரர்களின் இலக்கு தற்போது காவி ஆடையைத் தாண்டி, 'ஞானசார தேரருக்கு உடனடியாக ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும்' என்பதாக மாறியுள்ளது.



கடந்த கால வரலாற்றை உற்று நோக்கினால், பேரினவாத பௌத்த ஆதிக்கத்திற்கு ஆட்சியாளர்களும் அரச நிறுவனங்களும் பணிந்து போனபோதெல்லாம் நாடு சந்தித்த பேரழிவுகளும் வீழ்ச்சிகளுமே அதிகம் என்பதை உணர முடியும்.

1956ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 'சிங்களம் மட்டும்' சட்டம் பௌத்த தேசியவாத அமைப்புகளின் அழுத்தத்தினாலேயே தீவிரப்படுத்தப்பட்டது. இது நாட்டின் மொழியியல் மற்றும் சமூகக் கட்டமைப்பைப் பிளவுபடுத்தி, தசாப்த கால இன முரண்பாட்டிற்கும், இறுதியில் பேரழிவை ஏற்படுத்திய முப்பதாண்டு கால கொடூர உள்நாட்டுப் போருக்கும் வித்திட்டது.

1980களின் பிற்பகுதியில் உருவான அரசியல் கொந்தளிப்புகளிலும், நல்லாட்சி அரசாங்கத்தின் போது தீவிரமடைந்த பௌத்த தீவிரவாத அமைப்புகளின் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளிலும் மதவாதத்திற்கு அரசு இடமளித்ததன் விளைவாகவே நாடு பொருளாதார ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் வீழ்ச்சியடைந்தது.

2019ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னரான சூழலில், பௌத்த பேரினவாத அலையைப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடித்த சக்திகள் சட்டத்தின் ஆட்சியைப் புறந்தள்ளி மத மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முயன்றதன் இறுதி விளைவே, 2022 இல் நாடு சந்தித்த பாரிய பொருளாதார பொறிவும் மக்களின் எழுச்சியுமாகும்.

கடந்த கால வரலாற்றுச் சான்றுகள் தெளிவாக உணர்த்துவது என்னவெனில், மதவாதத்திற்கு அரசு அடிபணியும் போதெல்லாம் சட்டத்தின் ஆட்சி சீர்குலைந்து, முதலீடுகள் விலகி, நாடு உலக அரங்கில் தனிமைப்படுத்தப்பட்டு பொருளாதார ரீதியாக அதலபாதாளத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஜனநாயக அடிப்படையிலான ஒரு நாட்டின் சட்டக் கட்டமைப்பில் 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்ற கோட்பாடே மிக முக்கிய தூணாக விளங்குகின்றது. அரசியலமைப்பின் பிரிவு 12(1) நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் சமமான சட்டப் பாதுகாப்பை உறுதி செய்கிறது.



ஆனால், இலங்கையில் ஒரு நபர் அணியும் 'காவி உடை' அல்லது அவர் சார்ந்த "மத அடையாளம்' அவருக்குச் சட்ட விலக்களிக்கும் ஒரு கேடயமாகப் பயன்படுத்தப்படுவது தொடர்கதையாகிவிட்டது. ஞானசார தேரரின் விவகாரத்தில், அவர் மீதான குற்றச்சாட்டுகள் மத நம்பிக்கைகள் சார்ந்தவை அல்ல.

மாறாக நாட்டின் சட்டத்தையும் நீதிமன்ற இறையாண்மையையும் சவாலுக்கு உட்படுத்திய குற்றங்களாகும். அவ்வாறிருக்க, அவரொரு பௌத்த துறவி என்ற ஒரே காரணத்திற்காக அவருக்கு மீண்டும் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும் எனக் கோருவதும், அதற்காகக் கட்டமைப்பு ரீதியிலான அழுத்தங்களைப் பிரயோகிப்பதும் சட்டத்தின் ஆட்சியை அடியோடு தகர்க்கும் செயலாகும்.



மதத்தலைவர்கள் அல்லது துறவிகள் குற்றம் செய்யும்போது, அவர்களை மத அடையாளத்திற்கு பின்னால் ஒளிந்துகொள்ள அனுமதிப்பது,(பௌத்த தேரர்களுக்கு மட்டும்) நாட்டில் 'சட்டத்திற்கு அப்பாற்பட்டதொரு வர்க்கத்தை' உருவாக்குவதற்குச் சமமாகும். இது சாதாரண குடிமகன் ஒருவனுக்கும், மத அதிகாரம் கொண்ட ஒருவருக்கும் இடையிலான சட்டப் பாதுகாப்பில் பாரிய இடைவெளியை ஏற்படுத்துகிறது.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க வராகொட ஸ்ரீ ஞானரத்ன தேரரும், மல்வத்து பீடத்தின் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரும் சிறைச்சாலை அதிகாரிகளிடம் ஞானசார தேரரின் விடுதலை குறித்தும், பிக்குகளை அடைத்து வைப்பதற்குத் தனியான சிறை வளாகங்களை உருவாக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிக்குகளுக்குரிய மதக் காரியங்களைச்

தொடர்ச்சி: பக்கம் 13




**இந்தியப்படை ஈழமண்ணில் 1987, அக்டோபரில் அரங்கேற்றிய படுகொலைகள் மறக்கமுடியாதவை இன்று 2026, அக்டோபர். 39, வது ஆண்டு நினைவு .**

இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலைகொண்டிருந்த காலத்தில் 1987, தொடக்கம் 1990, வரை நடத்திய இனப்படுகொலைகள் 02/06/1987, தொடக்கம் 14/03/1990, வரை ஏறக்குறைய 370, தாக்குதல்களில் பல்லாயிரம் தமிழர்கள் கொல்லபட்டனர்.



இதில் மறக்கமுடியாத அதிகூடிய படுகொலைகள் 1987, அக்டோபர் மாதம் மட்டும் 31, படுகொலைகள் அதாவது தினம் ஒரு படுகொலைகள் என்ற வீதம் இடம்பெற்றன .

**1987, அக்டோபர் மாதம் அரங்கேறிய இனப்படுகொலைகள் விபரம்:**

1. 11.10.1987 - புதுக்காட்டு சந்தி படுகொலை - சந்தி
2. 12.10.1987 - மல்லாகம் படுகொலை - கிராமம்
3. 12.10.1987 கொல்லங்கலட்டி படுகொலை - கிராமம்
4. 12.10.1987 - சுன்னாகம் படுகொலை - கிராமம்
5. 12.10.1987 - பிரம்படி படுகொலை - கிராமம்
6. 12.10.1987 - பொற்பதி படுகொலை (கவச வாகனங்களை ஏற்றிப் படுகொலை)
7. 19.10.1987 - யாழ் சுற்றிவளைப்பு & படுகொலை - குடியிருப்புப் பகுதி



8. 19.10.1987 - கொட்டடி, ஆனைக்கோட்டை, கொக்குவில் இராசப்பாதை, உரும்பிராய், கோப்பாய், வசாவிளான் உள்ளிட்ட பகுதிகளில் நடத்திய படுகொலை
9. 20.10.1987 - மன்னார் தேடுதல் வேட்டைப் படுகொலை - குடியிருப்புப் பகுதி
10. 20.10.1987 - கேரதீவு இறங்குதுறை தேடுதல் வேட்டைப் படுகொலை - குடியிருப்புப் பகுதி
11. 20.10.1987 - சுண்டுக்குளி தேடுதல் வேட்டைப் படுகொலை - குடியிருப்புப் பகுதி
12. 20.10.1987 - உரும்பிராய் தேடுதல் வேட்டைப் படுகொலை - குடியிருப்புப் பகுதி
13. 21.10.1987 - யாழ் மருத்துவர்கள் படுகொலை - மருத்துவமனை
14. 21.10.1987 - யாழ் மருத்துவமனைப் படுகொலை - மருத்துவமனை
15. 22.10.1987 - சுண்டுக்குளி தேடுதல் வேட்டை - குடியிருப்புப் பகுதி
16. 22.10.1987 - யாழ் மருத்துவமனை ஊழியர்கள் படுகொலை
17. 22.10.1987 - அராலி தேடுதல் வேட்டைப் படுகொலை
18. 22.10.1987 - சுண்டுக்குளி படுகொலை
19. 22.10.1987 - அராலித்துறை படுகொலை
20. 24.10.1987 - யாழ் மத்திய கல்லூரி மாணவர் லக்ஸ்மணன் படுகொலை
21. 24.10.1987 - கொக்குவில் இந்துக்கல்லூரி படுகொலை
22. 25.10.1987 - கொக்குவில் இடம்பெயர்ந்தோர் முகாம் மீது பீரங்கித்தாக்குதல்
23. 25.10.1987 - சேரதீவு படுகொலை
24. 5.10.1987 - சந்தை மீது உலங்கு வானூர்தித் தாக்குதல்
25. 25.10.1987 - இந்துக்கல்லூரி அகதி முகாம் படுகொலை
26. 26.10.1987 - சூறாவத்தை படுகொலை
27. 26.10.1987 - அளவெட்டி படுகொலை
28. 26.10.1987 - புத்தூர் படுகொலை
29. 26.10.1987 - அளவெட்டி படுகொலை
30. 26.10.1987 - புத்தூர் படுகொலை
31. 27.10.1987 - சாவகச்சேரி கந்தசட்டி கோயில் படுகொலை

இந்திய அமைதியப்படை இராணுவம் மிகமோசமான ஒரு படுகொலை என 1987, அக்டோபர் மாதம் முழுவதும் யாழ்குடா நாட்டில் இடம்பெற்ற வரலாறு உண்டு.



இந்த படுகொலைகளில் மிலேச்சத்தனமான படுகொலையாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் நடந்த இனப்படுகொலை என்பது மறக்கமுடியாத துயரத்தை தந்த படுகொலையாகும்.

1987, அக்டோபர்,21, அன்று தீபாவளித்திருநாள் ஒரு விடுமுறை நாள் யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையில் அத்துமீறி நுழைந்த இந்திய அமைதிப் படை என்ற அடாவடி இராணுவத்தினர் சரமாரியாகச் சுட்டதில் நோயாளிகள், தாதிகள், மருத்துவர்கள், மற்றும் பணியாளர் கள் உட்பட 60,பேர் அதே இடத்தில் அன்றே கொல்லப்பட்டனர் 19 பே ர் காயம் அடைந்தனர்.

இலங்கை மற்றும் சர்வதேச மனித உரிமைக் குழுக்கள் இப்படுகொலைகளை இனப்படுகொலை எனக் கூறினர்.

இந்த இனப்படுகொலைகளை செய்துவிட்டு அதனை நியாப்படுத்தி புலிகளுக்கும், இந்திய இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற சண்டைகளில்

பா.அரியநேத்திரன்

இடையில் அகப்பட்ட பொதுமக்களே கொல்லப்பட்டனர் என இந்திய இராணுவத்துக்குப் பொறுப்பான லெப். ஜெனரல் டெப்பிந்தர் சிங் பச்சைப்பொய்யை அப்போது கூறினார். இத்தாக்குதலை மேற்கொண்ட இந்திய இராணுவத்தினர் எவரும் இந்திய அரசால் கைது செய்யப்படவில்லை என்பதே வரலாறு.



**கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம்:**

01. வைத்தியர் அருணாசலம் சிவபாதசுந்தரம், (44 வயது)
02. வைத்தியர் சேதுசிகாமணி கணேசரட்ணம், , (29 வயது)
03 .வைத்தியர் கதிர்காமு பரிமேலழகர்,(40வயது)
04. இராமநாதன் மங்கையற்கரசி, தாதி (31 வயது)
05. திருமதி வடிவேலு, தாதி (48 வயது)
06. முத்தையா லீலாவதி,தாதி (28 வயது)
07. பரமநாதன், தாதி (28,வயது)
08. கந்தையா செல்வராஜா,மேற்பார்வையாளர் (56 வயது)
09. கணபதி கிருஸ்ணராஜா, மேற்பார்வையாளர் (50வயது)
10. இராசரத்தினம் இரத்தினராஜா, ஆய்வுகூடப் பணியாளர் (28 வயது)
11. வைத்திலிங்கம் சண்முகலிங்கம், அம்புலன்ஸ் சாரதி (49வயது)
12. கந்தையா வேதாரணியம், ஊழியர் (27 வயது)
13. கந்தன் மார்க்கண்டு,ஊழியர் (39 வயது)
14 .குருசுமுத்து ஜோன்பீற்றர்,ஊழியர் (24வயது)
15. கணபதி சிவலோகநாதன், ஊழியர் (23வயது)
16 .இராமலிங்கம் சுகுமார், ஊழியர் (24 வயது)
17. முத்துக்குமாரு துரைராஜா,ஊழியர் (26 வயது)
18. பொன்னம்பலம் வரதராஜன், ஊழியர் (28 வயது)
19. கோபாலப்பிள்ளை உருத்திரன்,ஊழியர் (24 வயது)
20. சின்னப்பு ஜெயநாதன்,ஊழியர் (36 வயது)
21. தங்கவேலு சவுந்தரராஜா, மாணவன், (06 வயது)
22. பெலீசியன் சதீஸ்யோகேந்திரன், மாணவன்,(15 வயது)
23. மார்க்கண்டு தியாகராசா,சாரதி, (48 வயது)
24. அந்தோனிமுத்து அந்தோனி, விக்ரர் க.தி.க பொறுப்பாளர், (35வயது)
25. சுப்பையா மாணிக்கம்,(79வயது)
26. அரியகுட்டி இராசரத்தினம், சாரதி,( 53வயது)
27. அரியரட்ணம் லில்லிநேசம்,(75வயது)
28. அல்பிரட் அந்தோனிப்பிள்ளை ,( 65வயது)
29. அல்பிரட் மேரியோசெப்பின், (37வயது)
30. ஜெபமணி கீதபொன்கலன், (43 வயது)
31. ஜோன் சின்னையா,தொழிலாளி,(65 வயது)
32. யோன் சிமியோன்,தச்சுவேலை,(67வயது)
33. தோம்ஸ் பேரின்பநாயகம் (51, வயது) பஸ்தியாம்பிள்ளை, முகாமையாளர்,(66 வயது)

தொடர்ச்சி: பக்கம் 13




**தீபச்செல்வன்**

விண்வெளியின் எல்லைகளைக் கடந்து சாதித்த சுனிதா வில்லியம்ஸ், ஒரு பெண் குழந்தைக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் அவளை எத்தகைய உயரங்களுக்கும் அழைத்துச் செல்லும் என்பதற்கான எடுத்துக்காட்டாக இருக்கிறார். ஆனால், அதே உலகில் ஒரு பெண் குழந்தை தனது வாழ்வின் நெருக்கடிகளைத் தாங்கிக்கொள்ள முடியாமல் உயிரை இழக்கும் துயரமும் தொடர்கிறது. கிளிநொச்சியில் சமரழகி என்ற 17 வயது மாணவியின் மரணத்தைத் தொடர்ந்து, கோணாவில் பகுதியைச் சேர்ந்த இலக்கியா என்ற 17 வயது மாணவியும் உயிரிழந்த செய்தி சமூகத்தின் மனச்சாட்சியை உலுக்கியிருக்கிறது. சமரழகியின் மரணம் தொடர்பாக அச்சுறுத்தல் மற்றும் இணையவழித் துன்புறுத்தல் குறித்த குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், இலக்கியாவின் மரணத்துக்கான சூழல்கள் குறித்தும் விசாரணைகள் அவசியமாகின்றன. இந்த இழப்புகளைத் தனித்தனி துயரச் சம்பவங்களாகக் கடந்து செல்ல முடியாது. ஒக்டோபர் 11ஆம் திகதி கடைப்பிடிக்கப்படும் சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தில், பெண் குழந்தைகளின் உரிமைகளைப் பேசுவதுடன் அவர்களின் உயிரையும் மனநலத்தையும் பாதுகாக்கும் சமூகப் பொறுப்பை நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டியிருக்கிறது.



## கனவுகளுக்கும் வாழ்வுக்கும் இடையில்

2011ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஒக்டோபர் 11ஆம் திகதியை சர்வதேச பெண் குழந்தைகள் தினமாக அறிவித்தது. 2012ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்படும் இத்தினம், பெண் குழந்தைகளின் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, சமத்துவம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதையும், அவர்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான பிரச்சினைகளை உலகின் கவனத்துக்குக் கொண்டு வருவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. பெண் குழந்தைகளின் சாதனைகளைக் கொண்டாடுவது மட்டும் இந்த நாளின் பொருளல்ல. அவர்கள் அச்சமின்றி வாழவும், தமது விருப்பங்களை வெளிப்படுத்தவும், தோல்விகளிலிருந்து மீளவும், எதிர்காலத்தைத் தாங்களே தீர்மானிக்கவும் ஏற்ற சூழலை உருவாக்குவதும் அதன் அடிப்படை நோக்கமாகும்.

ஒரு பெண் குழந்தை பிறந்ததிலிருந்து அவளது வாழ்வைச் சுற்றி பல கட்டுப்பாடுகள் உருவாக்கப்படுகின்றன. அவள் எங்கே செல்ல வேண்டும், யாருடன் பேச வேண்டும், எப்படிச் சிந்திக்க வேண்டும் என்பதைக்கூடச் சமூகம் தீர்மானிக்க முற்படுகிறது. தவறு செய்தால் தண்டனை, எதிர்த்துப் பேசினால் அவமதிப்பு, விருப்பத்தை வெளிப்படுத்தினால் கண்காணிப்பு என அவளது உலகம் சுருக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு அன்பு வழங்குவது அவசியம்; அதேவேளை, வாழ்க்கையில் ஏற்படும் ஏமாற்றங்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளும் ஆற்றலை வளர்ப்பதும் அவசியம். அன்பும் பாதுகாப்பும் இணைந்திருக்க வேண்டும். கட்டுப்பாடுகள் மட்டும் நிறைந்த சூழல் குழந்தைகளின் மனநிலையைப் புரிந்துகொள்ள உதவாது.

## இணையவழி வன்முறையின் நிழலில்

சமரழகியின் மரணம் தொடர்பாக வெளியான செய்திகளில், அயல்வீட்டு இளைஞர் ஒருவரால் அச்சுறுத்தப்பட்டதாகவும் தனிப்பட்ட படங்கள் தவறாகப் பயன்படுத்தப்படும் என்ற அச்சம் இருந்ததாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகளின் உண்மைத் தன்மையை உரிய விசாரணைகள் உறுதிப்படுத்த வேண்டும். எனினும், இச்சம்பவம் எழுப்பும் சமூகக் கேள்வியைப் புறக்கணிக்க முடியாது. இணையம் ஒருவரை உலகத்துடன் இணைக்கும் கருவியாக இருக்கும் அதேவேளை, அவரை அச்சுறுத்தவும் அவமானப்படுத்தவும் பழிவாங்கவும் பயன்படுத்தப்படும்போது அது வன்முறையின் இன்னொரு வடிவமாக மாறுகிறது.



போலிக் கணக்குகள், அனுமதியின்றிப் பகிரப்படும் தனிப்பட்ட புகைப்படங்கள், பாலியல் அவதூறுகள், இணையவழி மிரட்டல்கள், பணம் பறித்தல், காதல் உறவுகளின் முறிவுக்குப் பின்னரான பழிவாங்கல்கள், செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் போலிப் படங்கள் எனப் பல்வேறு ஆபத்துகள் சிறுவர்களைச் சூழ்ந்துள்ளன. குறிப்பாக வடக்கு போன்ற சமூகங்களில் இணையத்தில் பரவும் ஒரு வதந்தி குடும்பம், பாடசாலை, உறவுகள் எனப் பல தளங்களில் பாதிப்பை ஏற்படுத்தலாம். பாதிக்கப்பட்ட குழந்தையின் தவறாக அல்லாத ஒரு நிகழ்வுக்குக்கூட அவளையே குற்றவாளியாக்கும் சமூக மனநிலை அவளது துயரத்தை மேலும் ஆழப்படுத்துகிறது.

2025ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான இணையக் குற்றங்கள் தொடர்பாக இலங்கையில் 4,742 முறைப்பாடுகள் பதிவாகியதாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் இணையக் குற்ற முறைப்பாடுகள் 2020ஆம் ஆண்டில் 24 ஆக இருந்த நிலையில், 2024ஆம் ஆண்டில் 1,539 ஆக உயர்ந்ததாகவும், 2025 ஒக்டோபர் 31ஆம் திகதி வரையில் 2,368 முறைப்பாடுகள் பதிவாகியிருந்ததாகவும் செய்திகள் வெளியாகின. இந்த எண்ணிக்கைகள் தற்கொலைகளுக்கான நேரடிக் காரணங்களை நிரூபிப்பவை அல்ல. ஆனால் இணையவழிப் பாதுகாப்பு வடக்கில் தீவிரமான சமூகப் பிரச்சினையாக உருவெடுத்திருப்பதை அவை உணர்த்துகின்றன.

## பாடசாலைகளின் பொறுப்பு

கிளிநொச்சியில் அடுத்தடுத்து நிகழ்ந்த மாணவிகளின் மரணங்கள் பாடசாலைகளில் உளவலுவூட்டல் பணிகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன. பாடசாலை என்பது பாடங்களையும் பரீட்சைகளையும் கற்பிக்கும் இடம் மட்டுமல்ல. ஒரு குழந்தை தனது பயம், தோல்வி, அவமானம், குடும்பப் பிரச்சினை ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்ளக்கூடிய பாதுகாப்பான இடமாகவும் அது இருக்க வேண்டும். மாணவர்களின் மதிப்பெண்களை மட்டும் கவனிக்கும் கல்விச் சூழல் அவர்களின் மனநிலையை அறிந்துகொள்ளத் தவறிவிடலாம்.

மாணவர்கள் தனிமைப்படுதல், வழக்கமான நடத்தையில் மாற்றம் ஏற்படுதல், பாடசாலைக்கு வருவதில் தயக்கம் காட்டுதல், அச்சத்துடன் காணப்படுதல் போன்ற அறிகுறிகளை ஆசிரியர்கள் கவனிக்க வேண்டும். இத்தகைய மாற்றங்கள் அனைத்தும் மனநலப் பிரச்சினையைக் குறிக்காது. எனினும், குழந்தையுடன் உரையாடுவதற்கும் தேவையான உதவியைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அவை வாய்ப்பளிக்கின்றன. ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர்கள் நம்பிக்கையுடன் அணுகக்கூடிய ஆசிரியர்கள், ஆலோசனைச் சேவைகள், இணையவழித் துன்புறுத்தல்கள் குறித்து முறைப்பாடு செய்வதற்கான பாதுகாப்பான வழிமுறைகள் ஆகியவை வலுப்படுத்தப்பட வேண்டும்.

தோல்வியை ஏற்றுக்கொள்வது, உணர்வுகளை வெளிப்படுத்துவது, பிரச்சினைகளைப் பகிர்ந்துகொள்வது, அச்சுறுத்தல்களை எதிர்கொள்வது, உதவி கோருவது போன்ற வாழ்க்கைத் திறன்கள் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். மனவலிமை என்பது எல்லா வலிகளையும் தனியாகத் தாங்கிக்கொள்வதல்ல. தாங்க முடியாத சூழலில் உதவி கேட்பதும், தமக்கான பாதுகாப்பைத் தேடுவதும், வாழ்க்கையைத் தொடர்வதற்கான வழிகளைப் பிறருடன் இணைந்து கண்டடைவதும்தான் உண்மையான ஆளுமையின் வெளிப்பாடுகள்.



## குடும்பமும் சமூகமும் மாற வேண்டும்

பெற்றோரின் அன்பும் பிள்ளைகளுடனான உணர்வுபூர்வமான பிணைப்பும் குழந்தைகளின் வளர்ச்சிக்கு அடிப்படையானவை. ஆனால் அன்பு செலுத்துவதுடன் பெற்றோரின் பொறுப்பு முடிந்துவிடுவதில்லை. பிள்ளைகள் தவறு செய்தால் தண்டிப்பதற்கு முன்னர் அதன் பின்னணியைப் புரிந்துகொள்ள முயல வேண்டும். அவர்களின் அச்சங்களைக் கேட்க வேண்டும். தமக்கு நேர்ந்த துன்புறுத்தலைக் கூறினால் அவமானப்படுத்தப்படுவோம் அல்லது தண்டிக்கப்படுவோம் என்ற பயம் குழந்தைகளிடம் உருவாகக் கூடாது.

வடக்கு-கிழக்கில் போருக்குப் பிந்தைய சமூகத்தின் பொருளாதார நெருக்கடிகள், குடும்பப் பிரிவுகள், பெற்றோரை இழந்த குழந்தைகளின் வாழ்வு, குடும்ப வன்முறை, போதைப்பொருள் பாதிப்பு, வேலைவாய்ப்பின்மை போன்ற பல சவால்கள் இளம் தலைமுறை யைச் சூழ்ந்துள்ளன. இவற்றுடன் இணைய உலகின் அழுத்தங்களும் இணைந்திருக்கின்றன. பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் தாய்மார் எதிர்கொள்ளும் போராட்டங்கள் பிள்ளைகளுக்கு வாழ்க்கையை எதிர்கொள்ளும் ஆற்றலைக் கற்றுக்கொடுக்கக்கூடும். அதேவேளை, அந்தக் குடும்பங்களின் பொருளாதாரச் சுமைகளையும் தனிமையையும் குறைப்பதற்கான சமூக ஆதரவும் அரசின் உதவிகளும் அவசியம்.

இணையவழி அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் குழந்தைகள் அச்சமின்றி முறைப்பாடு செய்ய முடியும் என்ற நம்பிக்கை உருவாக்கப்பட வேண்டும். காவல்துறையும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளும் இத்தகைய முறைப்பாடுகளை உணர்வுபூர்வமாகவும் விரைவாகவும் கையாள வேண்டும். பாதிக்கப்பட்ட குழந்தையின் தனி

தொடர்ச்சி: பக்கம் 14




மட்டு.நகரான்

அம்பாறை மாவட்டத்தின் மிகவும் பழமைவாய்ந்த தமிழ் கிராமமான வீரமுனை கிராமத்தின் வரலாறுகள் அடங்கிய நூல் அண்மையில் வெளியிட்டுவைக்கப்பட்டது.

வீரமுனை கிராமம் ஐந்து தசாப்தத்திற்கு மேலாக பல படுகொலைகளையும் அழிவுகளையும் சந்தித்த கிராமம் என்ற வகையில் அதன் வரலாறுகள் அடங்கிய நூல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளமையானது கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகவே நோக்கவேண்டியுள்ளது.



வடகிழக்கு தமிழர்களின் தாயகப்பகுதியின் வரலாறு என்பது முழுமையாக அடையாளப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றதா என்றால் இதுவரையில் அவ்வாறான எந்த முன்னெடுப்புகளும் இல்லையென்பதே இன்றைய நிலையாகவுள்ளது.

இலங்கைத் தீவின் வரலாற்றுப் பாதையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழ்விடமாகவும், அவர்களின் மொழி, பண்பாடு, மற்றும் இறையாண்மையின் மையமாகவும் திகழ்ந்துவந்துள்ளன. இருப்பினும், இலங்கையின் அரச அதிகாரப்பூர்வ வரலாற்றுப் பதிவுகளிலும், பாடநூல் பாடத்திட்டங்களிலும் தமிழர் தாயகத்தின் தொன்மையும் தொடர்ச்சியும் பெரும்பாலும் திட்டமிட்டு மறைக்கப்பட்டோ அல்லது திரிபுபடுத்தப்பட்டோ வந்துள்ளன. இந்தச் சூழலில், வடகிழக்கு தமிழர் தாயகத்தின் உண்மையான, முறையான மற்றும் முழுமையான வரலாற்றை அறிவியல் பூர்வமாக ஆவணப்படுத்துவது காலத்தின் முக்கிய தேவையாகும்.



வடகிழக்கு இலங்கையில் தமிழர்களின் வரலாறு என்பது ஏதோ சில நூற்றாண்டுகளுக்கு முன் தொடங்கிய ஒன்றல்ல மாறாக, அது பெருங்கற்காலம் மற்றும் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே தொடர்கிறது. ஆனைக்கோட்டை, பூநகரி, கந்தரோடை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் மற்றும் நாணயங்கள் கி.மு. 3-ஆம் நூற்றாண்டுக்கும் முன்னதாகவே இங்கு தமிழர்கள் ஒரு கட்டமைக்கப்பட்ட சமூகமாக வாழ்ந்ததைச் சான்றளிக்கின்றன.

தமிழர் தாயக வரலாற்றை முழுமையாக எழுதுவது என்பது வெறும் கடந்த காலத்தைப் பற்றிய ஆவணம் மட்டுமல்ல அது எதிர்காலத் தலைமுறையின் அடையாளத்தையும் உரிமையையும் பாதுகாக்கும் அரணாகும். தற்போது தொல்லியல் சின்னங்கள் ஆக்கிரமிப்புக்கும் சிதைவுக்கும் உள்ளாகி வருவதும், பண்டைய ஏட்டுச்சுவடிகள் சரியான முறையில் பாதுகாக்கப்படாமல் இருப்பதும் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. மேலும், பாரம்பரிய தமிழ் கிராமப் பெயர்கள் திரிக்கப்பட்டு சிங்களமயமாக்கப்படுவதும், மூத்த தலைமுறையினரின் வாய்மொழி வரலாறுகள் பதிவு செய்யப்படாமல் அழிந்துபோவதும் வரலாறு திரிபுபட முக்கிய காரணங்களாகின்றன.




இவ்வாறான நிலையிலேயே வீரமுனை கிராமத்தின் வரலாற்று பதிவுகள் அடங்கிய நூல் வெளியிட்டுவைக்கப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று பனங்காடு கலாபூஷணம், ஆய்வார்வலர் நா. நவநாயகமூர்த்தி எழுதிய “பண்டைய வரலாற்றில் வீரமுனையும் சிந்தாயாத்திரைப்பிள்ளையார் திருத்தலமும்” எனும் தலைப்பில் இந்த நூல் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.



வெறுமனே இதனை ஒரு நூலாக நோக்காமல் அம்பாறை மாவட்டத்தில் வாழும் தமிழ் சமூகம் ஒன்றின் வரலாற்று தடமாகவே பார்க்க வேண்டும். அம்பாறை மாவட்டத்தினை பொறுத்த வரையில் இன்று தமிழர் சமூகம் மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளதுடன் அவர்களின் பாரம்பரியங்களும் வரலாற்று தடங்களும் அழிந்துசெல்லும் நிலையில் அவற்றினை எதிர்கால சமூகத்திற்கு கொண்டுசெல்லும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பட்டுவரும் நிலையில் இந்த நூல் வெளியீடுசெய்யப்பட்டுள்ளது.

இந்நூல் வெறும் ஆலயப் பதிவாக மட்டுமன்றி, ஒரு கிராமத்தின் நினைவுகளையும் வரலாற்றையும் வெளிக் கொணரும் முயற்சியாக அமைந்துள்ளது. பெருங்கற்கால பண்பாட்டுத் தொடர்ச்சி, கி.மு. 3-ஆம் நூற்றாண்டின் பிராமி கல்வெட்டுகள், செப்பேடுகள் மற்றும் இலக்கிய ஆதாரங்களின் அடிப்படையில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

சோழ இளவரசியின் கடல் பயணத்தின் போது கடலடியில் கண்டெடுக்கப்பட்ட விநாயகர் திருவுருவம், கப்பல் தரைதட்டிய மட்டக்களப்பு வாவி வழியாக வீரமுனை மண்ணை வந்தடைந்த வரலாற்றுப் பின்னணியை இந்நூல் விவரிக்கிறது. ‘சிந்து’ (கடல்) பிரயாணத்தில் கிடைத்த பிள்ளையார் என்பதால் “சிந்தாயாத்திரைப் பிள்ளையார்” என்று பெயர் பெற்றது. கலிங்க மாகனின் ஆட்சிக் காலத்திலும், கண்டி அரசர்களான முதலாம் விமலதர்மசூரியன் மற்றும் இரண்டாம் இராஜசிங்கன் காலத்திலும் இந்நிலத்திற்கு மானியங்கள் வழங்கப்பட்டு பராமரிக்கப்பட்ட சான்றுகள் பதிவாகியுள்ளன.

வீரமுனையில் வாழ்ந்த மக்கள் பல்வேறு காலங்களில் ஏற்பட்ட படையெடுப்புகள், இடப்பெயர்வுகள் மற்றும் சூழல்சவால்களைச்சந்தித்தபோதிலும்,வீழ்ந்தபோதெல்லாம் மீண்டும் மீண்டெழுந்து தம் மண்ணையும் வரலாற்று அடையாளங்களையும் பாதுகாத்து வந்துள்ளனர். வேளாளர்கள், செட்டிமார்கள் போன்ற பல்வேறு சமூகப் பின்னணியைக் கொண்ட மக்கள் இங்கு குடியேறி, நிலம் மற்றும் பொருளாதார அமைப்புகளோடு ஒருங்கிணைந்து வாழ்ந்த வரலாற்றுச் சுவடுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ஆலயத்தின் பராமரிப்புக்காக வழங்கப்பட்ட வயல் நிலங்கள் மற்றும் ‘நாணாதேசிகள்’ போன்ற வணிகக் குழுக்களின் பங்களிப்புகள் மூலம், இது வெறும் சமய வரலாற்றுடன் நின்றுவிடாமல் ஒரு முழுமையான சமூக பொருளாதார வரலாறாகத் திகழ்கிறது.



ஆலய வளாகத்திலும் கிராமத்தைச் சுற்றிலும் கிடந்த தூண்கள், ஆசனக் கற்கள் மற்றும் தூசி படிந்த கற்களை தூய்மைப்படுத்தி ஆராய்ந்த போது, அதில் வரலாற்று எழுத்துக்களும் “நந்தா விளக்கு” போன்ற தானப் பதிவுகளும் கண்டறியப்பட்டன. சாதாரணக் கற்களாகக் கடந்து போகாமல், அவற்றை வரலாற்று ஆவணங்களாகக் கருதி அடுத்த தலைமுறைக்குக் கடத்த வேண்டியதன் அவசியத்தை இந்நூல் உணர்த்துகிறது. “பண்டைய வரலாற்றில் வீரமுனை” என்னும் இந்நூல், கடந்த கால வரலாற்றை அறிந்துகொள்வதோடு நின்றுவிடாமல், எதிர்கால இளைய தலைமுறையினரும் மாணவர்களும் தங்கள் ஊர் வரலாற்றையும், தமிழ் கிராமங்களின் தொன்மையையும் தேடி ஆராய்வதற்கான ஒரு தூண்டுகோலாகவும் வழிகாட்டியாகவும் அமைகின்றது.

சம்மாந்துறை என்னும் கிராமம் தோற்றம் பெறுவதற்கு முன்பாகவே தோற்றம்பெற்ற வீரமுனைக் கிராமம் என்பது சோழர்கள் வருவதற்கு முன்பாகவே இங்கு தமிழர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பது ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது.இதன்மூலம் அம்பாறை மாவட்டத்தில்

தொடர்ச்சி: பக்கம் 13




இறுதிப்பாகம்

**பெண்களின் அரசியல் தலைமைத்துவத்தைப் பாதுகாப்பதில் புலம்பெயர் சமூகத்தின் தோல்வி**

தமிழ் புலம்பெயர் சமூகம், அதன் சொந்த அரசியல் நிறுவனங்களுக்குள்ளும் உள்ள முரண்பாடுகளை எதிர்கொள்ள வேண்டும்; குறிப்பாக, பெண்கள் தங்களின் வரலாற்றுப் பங்களிப்புகளுக்காகப் போற்றப்படும் அதே வேளையில், சமகாலத் தலைமைத்துவம் நிலைபெற்ற ஆண் தலைவர்களிடமே குவிந்திருக்கும் சூழலில் இது அவசியமாகிறது.



புலம்பெயர் சமூகங்கள் முழுவதும், பெண்கள் நினைவுக் கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்வதிலும், விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை ஒருங்கிணைப்பதிலும், அகதிக் குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதிலும், பண்பாட்டு மரபுகளைப் பாதுகாப்பதிலும் பெருமளவில் பங்களிக்கின்றனர். ஆயினும், இந்தப் பொறுப்புகள், அரசியல் வியூகம், பிரதிநிதித்துவம் அல்லது நீண்டகால நோக்கங்களைத் தீர்மானிக்கும் முடிவுகளில் அர்த்தமுள்ள பங்களிப்பாக எப்போதும் மாறுவதில்லை.

இளம் பெண்கள் விலக்கப்படுவது குறிப்பாகக் கவலையளிக்கிறது, ஏனெனில் இது, நிரூபிக்கப்பட்ட அர்ப்பணிப்பு மற்றும் அரசியல் புரிதலுடன் அல்லாமல், வயது, நிறுவனப் பதவி மூப்பு அல்லது நிலைபெற்ற உறவுகளுடன் அரசியல் அங்கீகாரத்தை சமன்படுத்தும் ஒரு போக்கைப் பிரதிபலிக்கிறது.



இளம் ஈழத் தமிழ் பெண்கள், அகதிகள் நலன் சார்ந்த குரல் எழுப்புதல், சர்வதேச மனித உரிமைகள் ஈடுபாடு, சட்டக் கல்வி மற்றும் கட்டமைப்பு ரீதியான சமத்துவமின்மையை எதிர்கொள்ளும் இயக்கங்களில் பங்கேற்றல் போன்ற அனுபவங்கள் மூலம் அரசியல் விழிப்புணர்வை வளர்த்துக் கொண்டுள்ளனர். அவர்களின் கண்ணோட்டங்கள் முந்தைய தலைமுறையினரின் கண்ணோட்டங்களிலிருந்து வேறுபடுகின்றன என்பதற்காக மட்டும் அவை புறக்கணிக்கப்படக்கூடாது.

இளம் பெண்கள் காலவரையறையின்றி துணைப் பாத்திரங்களிலேயே இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதற்குப் பதிலாக, முடிவெடுப்பதில் அவர்கள் பங்கேற்பதற்கு அர்த்தமுள்ள வாய்ப்புகளை உருவாக்குவதே நிலைபெற்ற தலைமையின் பொறுப்பாக இருக்க வேண்டும்.

விடுதலைப் போராட்டத்தின் போது ஆழமாக வேரூன்றிய எதிர்பார்ப்புகளுக்கு சவால் விடுத்த பெண்களைப் போற்றும் ஒரு சமூகம், இன்று ஆழமாக வேரூன்றிய அரசியல் எதிர்பார்ப்புகளுக்கு சவால் விடும் பெண்களையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

செல்வி **ரேணுகா இன்பக்குமார்**
வழக்கறிஞர், அவுஸ்திரேலியா.
பேச்சாளர், தமிழ் ஏதிலிகள் கழகம்.

**சாதி, பாலினம் மற்றும் உண்மையான விடுதலையின் பொருள்**

தமிழ் சமூகங்களுக்குள் வாய்ப்புகளைத் தொடர்ந்து பாதிக்கும் சாதி அடிப்படையிலான பாகுபாடு, பொருளாதார ஏற்றத்தாழ்வு மற்றும் பிற சமூகப் படிநிலைகளை எதிர்கொள்ள வேண்டிய தேவையிலிருந்து தமிழ் பெண்களின் விடுதலையைப் பிரிக்க முடியாது.



தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் வரலாறு, பாரம்பரிய சமூகப் பிரிவுகளுக்கு சவால் விடும் முயற்சிகளை உள்ளடக்கியிருந்தாலும், சாதிப் பாகுபாடு மற்றும் அரசியல் வாய்ப்புகளுக்கான சமமற்ற அணுகல் ஆகியவை தொடர்ந்து நிலவுவது, தமிழ் சமூகத்தின் மாற்றம் இன்னும் முழுமையடையவில்லை என்பதையே காட்டுகிறது.

விளிம்புநிலை சாதி மற்றும் சமூகப் பொருளாதாரப் பின்னணியைச் சேர்ந்த பெண்கள், தற்போதுள்ள தலைமைத்துவக் கட்டமைப்புகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதில் மட்டுமே கவனம் செலுத்தும் பாலின சமத்துவம் குறித்த புரிதலின் மூலம் போதுமான அளவு தீர்க்க முடியாத, ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய புறக்கணிப்பு வடிவங்களை அனுபவிக்கக்கூடும்.

எனவே, உண்மையான அனைவரையும் உள்ளடக்கிய ஒரு அரசியல் இயக்கம், பெண்கள் பிரதிநிதித்துவம் பெறுகிறார்களா என்பதை மட்டுமல்லாமல், எந்தப் பெண்களுக்கு அதிகாரம் செலுத்துவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன, யாருடைய அனுபவங்கள் அரசியல் முன்னுரிமைகளைத் தீர்மானிக்கின்றன, மேலும் நிறுவப்பட்ட சமூக வலைப்பின்னல்களுக்கு வெளியே உள்ள தனிநபர்களுக்கும் முடிவுகள் எடுக்கப்படும் கட்டமைப்புகள் அணுகக்கூடியவையாக இருக்கின்றனவா என்பதையும் ஆராய வேண்டும்.

சமத்துவக் கோட்பாட்டை அரசியல் வசதிக்காகத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த முடியாது. தமிழ் தேசம் கண்ணியம், சுதந்திரம் மற்றும் கூட்டு சுயநிர்ணயம் ஆகியவற்றில் வேரூன்றிய ஒரு அரசியல் எதிர்காலத்தை நிறுவ முற்பட்டால், சாதி அடிப்படையிலான பாகுபாடு ஆணாதிக்கப் புறக்கணிப்பும் அந்த நோக்கத்திற்கான அடிப்படைத் தடைகளாக எதிர்கொள்ளப்பட வேண்டும்.

**புதிய தலைமுறையின் பொறுப்பு**

இளம் ஈழத் தமிழ் பெண்களைப் பொறுத்தவரை, இரண்டாம் லெப்டினன்ட் மாலயின் மரபு என்பது, முந்தைய தலைமுறையின் அனுபவங்களையோ அல்லது தியாகங்களையோ அப்படியே மீண்டும் நிகழ்த்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பாகப் புரிந்து கொள்ளப்படக் கூடாது. மாறாக, அது அவர்களை அரசியல் வாழ்வில் பங்கேற்கவும், அநீதியை எதிர்த்து நிற்கவும், தங்கள் சமூகங்களை வடிவமைக்கும் நிறுவனங்களுக்குள் தலைமைத்துவப் பங்கை வகிக்கவும் கூடிய தங்கள் திறனை உணர்ந்துகொள்ள ஊக்குவிப்பதாக அமைய வேண்டும்.

ஆயுதப் போராட்டக் காலத்தில் இருந்ததை விட, இன்றைய இளம் தலைமுறையினர் எதிர்கொள்ளும் பொறுப்புகள் மாறுபட்டவை. சர்வதேச அளவில் பொறுப்புக்கூறலை வலியுறுத்துதல், மனித உரிமை மீறல் களை ஆவணப்படுத்துதல், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளித்தல், பாகுபாடு காட்டும் கொள்கைகளை எதிர்த்தல், வரலாற்று நினைவுகளைப் பாதுகாத்தல் மற்றும் தமிழ் மக்களின் உரிமைகளை முன்னெடுப்பதற்கான அரசியல் மற்றும் சட்டரீதியான வாதங்களை உருவாக்குதல் ஆகியவை இதில் அடங்கும்.



இந்தப் பொறுப்புகளை நிறைவேற்ற கல்வி, அரசியல் விழிப்புணர்வு, சுதந்திரமான சிந்தனை மற்றும் தமிழ் சமூகத்திற்குள்ளேயே நிலவும் கருத்துக்கள் உட்பட, ஏற்கனவே நிறுவப்பட்ட நம்பிக்கைகளைக் கேள்விக் குள்ளாக்கும் மன உறுதி ஆகியவை அவசியமாகும்.

தமிழ் பெண்களின் அரசியல் பங்கேற்பின் எதிர்காலம், தற்போதைய தலைமைத்துவத்தால் திணிக்கப்படும் எதிர்பார்ப்புகளுக்கு இணங்கிச் செல்லும் அவர்களின் விருப்பத்தைச் சார்ந்ததாக இருக்கக்கூடாது. மாறாக, தங்கள் சமூகங்களின் திசையைத் தீர்மானிப்பதிலும், தங்கள் கூட்டு எதிர்காலம் தொடர்பான முடிவுகளில் பங்கேற்பதிலும் பெண்களுக்குச் சம உரிமை உண்டு என்பதை அங்கீகரிப்பதன் அடிப்படையிலேயே அது அமைய வேண்டும்.

இடப்பெயர்வு மற்றும் தீர்க்கப்படாத அநீதிகளின் விளைவுகளைச் சுமந்து நிற்கும் ஒரு தலைமுறைக்கு, தமிழ் பெண்களின் பங்கேற்பு வரலாற்றைப் பாதுகாக்கும் பொறுப்புடன், பெண்களை கடந்த காலத் தலைவர்களாக மட்டும் நினைவுகூராமல், நிகழ்காலத் தலைவர்களாகவும் அங்கீகரிக்கும் நிறுவனங்களை உருவாக்கும் உறுதிப்பாடும் அவசியமாகும்.

**முப்பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பிறகும்: முழுமையடையாத புரட்சி**

இரண்டாம் லெப்டினன்ட் மாலயின் மறைவுக்குப் பிறகு முப்பத்தொன்பது ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், தமிழ் தேசம் எதிர்கொள்ளும் முக்கிய கேள்வி, அவரது

தொடர்ச்சி: பக்கம் 13




ஒரு காலத்தில் ஈழதேசத்தில் இளையோரின் மரணங்கள் நிகழ்ந்தன, அவை, அர்த்தமுள்ளவையாக இருந்தன. தியாகத்தின் அடையாளமாக இருந்தன, உன்னதமான அன்பின் அர்ப்பணிப்பாக இருந்தன. ஆனால் இப்போது தம்மை தாமே, மாய்த்துக்கொள்ளுகிற தற்கொலை இறப்புக ளும் நேசித்தவர்களின் உயிரை எடுக்கிற கொலைக ளும் அதிகரித்துள்ளன. இதை ஒவ்வொரு சாரார் ஒவ்வொரு விதமாக விமர்சித்து எழுதுவதன் ஊடாக, சமூக கொலை யாளிகளாக மாறிக்கொண்டிருக்கின்றனர்.



அண்மைக்காலத்தில் வடபகுதியில் படித்துக் கொண்டிருக்ககூடிய, படித்து மிகச்சிறந்த ஆளுமையாக பணி செய்கிற இளையவர்களின் மரணங்களை அதிகமாக சமூக வலைத்தளங்களில் பார்க்கக் கூடியதாக இருந்தது. இதில் ஆண்களை குற்றவாளிகளாக ஒருசாராரும் பெண் களை குற்றவாளிகளாக இன்னொரு சாராரும் குற்றம் சுமத்தி, ஆணாதிக்கம் என்றும் பெண்ணியம் என்றும் எழுதுகோலால் தத்தமது மன எண்ணங்களை கொட்டித் தீர்த்துக்கொண்டிருக்கின்றனர்.



தவில் வித்துவானான இளைஞனின் மரணம், காரணம் தெரியாமல் எங்கோ ஒரு சிங்கள ஊரில் உயிரை மாய்த்திருந்த ஆளுமைப் பெண்ணான வனிதா சேனாதி ராஜாவின் மரணம், போதைப்பொருள் பாவனை யாளனான இளைஞனால் மிரட்டப்பட்ட பெண் சமரழகியின் உயிர் மாய்ப்பு, , சாதாரண தரத்தில் ஒன்பது பாடங்களிலும் அதிதிறமைச் சித்தி பெற்ற மாணவன் சுரேந்திரனின் உயிர் மாய்ப்பு, கோணாவில் மாணவி இலக்கியாவின் உயிர் மாய்ப்பு இப்படி இன்னும் சொல்லிக்கொண்டு போகலாம். இத்தோடு யாழ்ப்பாணத்தில் குத்திக்கொல்லப்பட்ட சமை யல் கலை நிபுணரின் மரணம், அவரைக் கொன்ற இளைஞ னின் உயிர் மாய்ப்பு இவை எல்லாம் தற்போது மிக அண் மைக் காலத்தில் நடந்த சம்பவங்கள்.

எங்களுடைய பிள்ளைகளின் மனம் எதை நோக் கிச் செல்கிறது, இந்த துயரமான நிலைக்கு என்ன காரணம், ஒரு சாராரை மட்டும் குறை சொல்வதனால் இப்பிரச்சனை தீர்க்கப்படுமா, இப்படி எல்லாம் நிறைய கேள்விகள் உள்ளன.

ஒருவருடைய மனநிலையில் ஏற்படுகின்ற விரக்தியே இப்படியான முடிவைத் தேட வைக்கிறது, தமது பிரச்சினையை வெளியே சொல்லமுடியாமல் தமக்குள் ளேயே வைத்து புளுங்கி, அதன் வடிகாலாக எதுவும் புலப்படாத நிலைமையில் இந்த உகலகத்தில் இருந்து விடுபடுவதே தமக்கான தீர்வு என நினைக்கிறார்கள், அதனாலேயே அவசரமாக தமது முடிவை செயலாகவும் மாற்றுகிறார்கள். கொஞ்சம் சிந்திப்பதற்கு அவர்களின் மனநிலை ஒத்துழைப்பதில்லை போலும்.



பிள்ளைகளோடு அமர்ந்திருந்து, அவர்களின் குறைகளையும் நிறைகளையும் கதைக்க வேண்டும், அவர்களைச் சொல்லவிட்டு, நாங்கள் கேட்பதன் மூலம் தான், அவர்களின் மனதில் இருப்பவை வெளியே வரும்.அவர்கள் வளர்க்கப்படுகிற விதத்தை மாற்றுவதே இதற்கான தீர்வாக மாறும், மனித வாழ்க்கை என்பது அனைவருக்குமாக வழங்கப்பட்ட ஒரு மிகப்பெரிய வரம், அதை நாம் புரிந்து கொள்வதோடு நமது பிள்ளைகளுக்கும் தெளிவாக விளக்க வேண்டும். அதாவது, மதிப்பெண்களை பெறுவதற்கு ஊக்க மளிக்கிற அளவுக்கு இன்றைய கல்வி வழிநடத்தல், மதிப்பாக வாழுவதை கற்றுக் கொடுப்பதில்லை, வெற்றிகளால் அலங்கரிக்கப்படுவதை விட தோல்வியில் இருந்து மீண்டு வருகிற மனத்திடத்தை தான் அவர்களின் மனதிலே பதிக்க வேண்டும். வகுப்பறை கல்வியோடு வாழ்க்கை கல்வியையும் எமது பிள்ளைகளிடம் ஊட்ட வேண்டும்.

பிள்ளைகள் சிறுவர்களாக வளரும் காலத்திலேயே, அன்பு, கனிவு, இரக்கம், துணிச்சல், தன்னம்பிக்கை,

## கோபிகை

மற்றோரை மதிக்கிற மனப்பக்குவம் இவற்றை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக சொல்லிக்கொடுக்க வேண்டும். சுவரிலே நுழைகிற வேர்களாக இவர்களை உருவாக்கி விட்டால், அது, வீட்டையும் பாதித்து, மரத்தையும் காவு வாங்கிவிடும் என்பதை எப்போதும் அவர்களுக்கு ஏற்ற விதமாக எடுத்துரைக்க வேண்டும்.

விரிந்து மலர்கிற அவர்களின் புன்னகைக்கு



பின்னால் இருக்கிற வெறுமையை நாங்கள் உற்றுப் பார்ப்பதில்லை, அவர்களின் இளம் மனங்களில் ஊசலாடு கிற தனிமையும் தவிப்பும் தமக்கு யாருமே இல்லை என நினைக்க வைக்கிற வெறுமையும் தான் இப்படி ஒரு முடிவுக்கு அவர்களைத் தள்ளி விடுகிறது.

ஆண்பெண் ஈர்ப்பு என்பது இன்று பலவாறாக ஒரு நோய்போலபரவியுள்ளது,அதுவயதுவித்தியாசங்களையோ, கலாசார பண்பாட்டு விழுமியங்களையோ பார்க்காமல் ஒன்றித்து விடுகிறது. ஆரம்பத்தில் மிக இனிப்பாக இருக்கிற விடயங்கள் காலப்போக்கில் கசப்பாக மாறுகின்றது, எந்தளவுக்கு அதன் கசப்பு இருக்கும் என்றால், அன்பிலே திழைத்தவர்கள் ஒருவரை ஒருவர் வார்த்தைகளாலும் செயலாலும் குத்தி கிழித்து இரணப்படுத்துகிற அளவுக்கு அதன் தாக்கம் இருக்கிறது. அந்த வெம்மையைத் தாங்க முடியாமல் சிலரின் உயிர் மாய்ப்பு நடந்து விடுகிறது.

ஆறுதலான வார்த்தைகளும் அன்பான பற்றுத லுமே இதற்கான தீர்வாக அமையும், பெற்றோர்கள், ஆசிரியர் கள் மட்டும் இல்லாது சமூகமும் இந்த விடயத்தை அக்கறை யோடு அணுகினால் நிச்சயமாக இந்த துயரத்திலிருந்து விடுபடலாம்.

• • •

## ஐபோன்களை ஏற்றிச் ... தொடர்ச்சி...

மோதியதாக ஈரானின் IRGC கடற்படை தெரிவித்துள்ளது. புதன்கிழமை(14) காலை துபாயிலிருந்து ஆடம்பர வாசனை திரவியங்கள் மற்றும் ஐபோன்களை (iPhones) ஏற்றிச் சென்ற அந்த கப்பல் தீப்பிடித்து நீரிணைக்குத் தெற்கே மூழ்கியது. ஹார்முஸ் நீரிணையில் தாக்கப் பட்டுக் மூழ்கடிக்கப்பட்ட அந்தக் கப்பலின் காட்சிகள் வெளியாகியுள்ளன.

## செயற்கை நுண்ணறிவு ... தொடர்ச்சி...

எச்சரித்தனர்.

ஒரு பிணையத்துடன் இணைக்கப்பட்ட 15 மலிவான ஆண்ட்ராய்டு டிவி பெட்டிகளில் ஒரு ஏஐ மாதிரியை வெற்றிகரமாக இயக்கியதாக ஆந்த்ரோபிக் கூறியது. தனித்தனி சோதனைகளில், மேம்பட்ட மாதிரிகள் உருவகப்படுத்தப்பட்ட சாதனங்களில் தங்களைப் பெருக்கிக்கொள்ளும் திறனை வெளிப்படுத்தின, இருப்பினும் அந்தச் சோதனைகள் அவற்றை அணுகும் செயல்முறையை எளிதாக்கின.

முழுமையான தன்னாட்சி கொண்ட கட்டுப்பாடற்ற ஏஐ பெருக்கி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் வலியுறுத்தினர். இருப்பினும், சிறிய மாதிரிகள் மனிதத் தலையீடு இல்லாமல் பரவுவதற்குத் தேவையான தனிப்பட்ட படிகளைச் செய்யும் திறனைப் பெற்று வருகின்றன.

ஸ்மார்ட் வீட்டு உபகரணங்கள் பெரும்பாலும் வரையறுக்கப்பட்ட பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டிருப் பதால், அவை குறிப்பாகப் பாதிக்கப்படக்கூடியவை. குளிர் சாதனப் பெட்டிகள், அடுப்புகள், தானியங்கி வெற்றிட சுத்திகரிப்பான்கள் மற்றும் புல்வெட்டும் இயந்திரங்கள் உள்ளிட்ட, ஒப்பீட்டளவில் குறைந்த கணினி ஆற்றல் கொண்ட சாதனங்கள் கூட, கூட்டாகச் சேர்ந்து செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை ஆதரிக்கக்கூடும் என்று ஆந்த்ரோபிக் நிறுவனம் கூறுகிறது.

பாதுகாப்புக் கேமராக்கள் மற்றும் உள்ளமைக்கப் பட்ட செயற்கை நுண்ணறிவு சில்லுகளைக் கொண்ட பிற சாதனங்களும் கவர்ச்சிகரமான இலக்குகளாக மாறக்கூடும்.

பொதுவாக குறிப்பிட்ட வன்பொருள் அல்லது மென்பொருளைக் குறிவைக்கும் வழக்கமான தீம் பொருளைப் போலல்லாமல், தன்னைத்தானே நகலெ டுக்கும் செயற்கை நுண்ணறிவு, அறிமுகமில்லாத அமைப்புகளுக்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொண்டு, வெற்றிகரமான நுட்பங்களை அடுத்தடுத்த பிரதிகளுக்குக் கடத்தக்கூடும்.




இலங்கையின் அழகுமிக்க மலைநாட்டின் குளிர்ந்த பின்னணியில், தேயிலைத் தோட்டங்களின் செழுமைக் குப் பின்னால் ஒரு கசப்பான மற்றும் துயரமான யதார்த்தம் மறைந்துள்ளது. எமது நாட்டின் பொருளாதாரத்தின் தூண் களாக விளங்கும் பெருந்தோட்ட மக்கள், இன்று எத்தகைய கடுமையான பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளை எதிர்கொள்கிறார்கள் என்பது குறித்த ஆழமான பார்வை அவசியமாகிறது. உழைக்கும் மக்களுக்குப் போதிய ஊதியம், நில உரிமை மற்றும் சமூக சுயமரியாதை கிடைக்காத வரை இந்தத் துறையைக் காப்பாற்ற முடியாது.



**கேள்வி 01. இலங்கையின் தேயிலைத் தோட்டத் தொழி லாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வரலாற்றுப் பெருவீழ்ச்சிக்கான காரணம் என்ன?**

**பதில்:** 1992ஆம் ஆண்டு தோட்டத் துறையைத் தனியார் மயமாக்கல் செய்த காலகட்டத்தில், சுமார் 3 முதல் 5 லட்சம் வரை பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்கள் பணியில் இருந்தனர். ஆனால், தற்போதைய நிலவரப்படி பதிவுசெய்யப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை வெறும் 76,000 முதல் 80,000 வரை வீழ்ச்சியடைந்துந்துள்ளது. தோட்டப் பகுதிகளில் சுமார் 10 லட்சம் மக்கள் வாழ்ந்தாலும், முறைசார்ந்த பதிவோடு முழுமையாகப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகப் பெரியளவில் சரிந்துள்ளது.



பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத் தின் பிரதானியாக முன்பு செயல்பட்ட ஜனநாயக மக்கள் முன்னணியின் துணைத் தலைவர் பரத் அருள்சாமி இந்த தரவுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

முறையான வேலைப் பாதுகாப்பு மற்றும் நிரந்தரத் தன்மையின்மை காரணமாக இளைஞர்கள் தோட்டத் தொழிலை முழுமையாகத் தவிர்க்கின்றனர். தலைமுறை தலைமுறையாகத் தோட்டங்களிலேயே வாழ்ந்தாலும், தமக்கென சொந்த நிலமோ அல்லது பாதுகாப்பான எதிர்காலமோ அற்றவர்களாக அவர்கள் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

**கேள்வி 02. பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களுக்கும், தற்காலிக மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் இடையிலான இடைவெளி எத்தகையது?**

**பதில்:** அரசாங்கத்தின் தலையீட்டை அடுத்து நாளாந்த சம்பளமாக 1,750 ரூபாய் உயர்த்தப்பட்டதில், 1,500 ரூபாயை பெருந்தோட்ட நிறுவனங்களும், 250 ரூபாயை அரசும் வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அந்த 250 ரூபாய் மேலதிகப் பணம் வழக்கமாகப் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படு கிறது. எஞ்சியுள்ள தற்காலிக மற்றும் ஒப்பந்தத் தொழி லாளர்களுக்கு இந்த மேலதிக ஊதியமோ அல்லது முறையான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களோ கிடைப் பதில்லை. அவர்கள் அன்றாடம் பறிக்கும் கொழுந்துக்குரிய அடிப்படைப் பணத்தைத் தாண்டி எந்தவித சலுகைகளும் பெறுவதில்லை.

சிறு தோட்ட உரிமையாளர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடம் பணிபுரியும் தற்காலிகத் தொழிலாளர் களுக்குத் தொழிலாளர் அமைச்சிடமிருந்து முறையான கட்டமைப்புப் பாதுகாப்போ, சட்டப்பூர்வ உரிமைகளோ கிடைப்பதில்லை. தேயிலைத் தோட்டங்களில் வியர்வை சிந்தி உழைத்தாலும், அவற்றுக்கான எதிர்காலப் பாதுகாப்பு முற்றிலும் மறுக்கப்படுவதே இவர்களின் மிகப்பெரிய சவாலாகும்.



**கேள்வி 03. தோட்டத் தொழிலாளர்கள் கொழும்பு போன்ற நகரங்களுக்குச் சென்று வேலைகளில் ஈடுபடுவதற்கான உண்மையான காரணம்?**

**பதில் :** தோட்டத்தில் வேலை செய்தால் மாதம் 28,000 முதல் 30,000 ரூபாய் வரை சம்பாதிக்க முடியும் என்றாலும், அங்கு தோட்ட முகாமையாளர் உள்ளிட்ட நிர்வாக அதிகாரிகளின் அடக்குமுறைகளையும் கடுமையான அதிகார துஷ்பிர யோகங்களையும் தொழிலாளர்களால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. இதனால் சுயமரியாதைக்கு முன்னுரிமை அளிக்கும் பல இளைஞர்கள், தோட்டத்தில் கிடைக்கக்கூடிய அதிக வருமானத்தை விடுத்து, கொழும்பு உள்ளிட்ட நகர்ப்புறங்களில் சாதாரண தற்காலிக வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

கொழும்பில் குறைந்த சம்பளம் கிடைத்தாலும் தமக்குச் சுயமரியாதை இருப்பதாக அவர்கள் கருதுகின்றனர். பெருந்தோட்ட இளைஞர்கள் தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும் போது முறையான மரியாதையையும் கண்ணியத்தையும் எதிர்பார்க்கின்றனர். ஆனால், அங்கு அவர்கள் கடுமையான தொழில் ரீதியான பாகுபாட்டை எதிர்கொள்கின்றனர். நிர்வாகங்களின் சர்வாதி காரப் போக்கு, மனிதநேயமற்ற வேலைச்சூழல் மற்றும் அடிமைகளைப் போல் நடத்தப்படும் தொழில் ரீதியான பாகுபாடுகள் ஆகியவை இளைஞர்களை ஊரை விட்டு வெளியேறத் தூண்டுகின்றன. பொருளாதார ரீதியாகச் சிறிதளவு பணம் கிடைத்தாலும், அடிப்படைச் சுயமரியாதை மற்றும் மனித உரிமை மறுக்கப்படும் இடத்திலே வாழ முடியாது என்ற மன உளைச்சலுக்கு அவர்கள் ஆளாகியுள்ளனர்.

மருதன் ராம்

**கேள்வி 04. தோட்டப் பகுதிகளில் வசிக்கும் இந்திய வம்சாவளி மக்களின் மக்கள் தொகை மற்றும் அவர்களின் சமூக நிலை என்ன?**



**பதில்:** இலங்கையில் ஒட்டுமொத்தமாக சுமார் 16 லட்சம் இந்திய வம்சாவளி மக்கள் வசிக்கிறார்கள். இவர்களில் சுமார் 6 லட்சம் பேர் கொழும்பு போன்ற நகர்ப்புறப் பகுதிகளில் குடியேறி வாழ்கின்றனர். மீதமுள்ள சுமார் 10 லட்சம் பேர் தோட்டப் பகுதிகளிலேயே தொடர்ந்து வாழ்ந்தாலும், அதில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை வெறும் 70,000 முதல் 80,000 வரை மட்டுமே உள்ளது. பெரும்பான்மையான இளைஞர்கள் தோட்டத் தொழிலை முழுமையாகப் புறக் கணித்துவிட்டு வெளியேற முயல்கின்றனர். மக்கள் தொகை அடிப்படையில் பெருமளவில் தோட்டப் பகுதிக ளில் வசிப்பினும், அவர்களுக்கான சமூக மேம்பாடு, உட்கட்ட மைப்பு வசதிகள் மற்றும் பொருளாதாரப் பங்களிப்பு ஆகியவை உரிய முறையில் அங்கீகரிக்கப்படுவதில்லை. முறையான வழிகாட்டுதலின்மை மற்றும் கல்வி வாய்ப்புக் குறைபாடு காரணமாக இந்தச் சமூகம் தொடர்ந்தும் பல பொருளாதாரத் தடைகளைச் சந்தித்து வருகிறது.

**கேள்வி 05. இந்தத் துறையின் வீழ்ச்சிக்கு மனிதவள மேலாண்மை மற்றும் பொருளாதார ரீதியாக நாம் எங்கு தவறிவிட்டோம்?**



**பதில்:** பிற நாடுகளுடன் ஒப்பிடும்போது இங்கு கூலி அதிகம் என்று கூறப்பட்டாலும், இலங்கையின் தற்போதைய வாழ்க்கைச் செலவு மற்றும் பணவீக்கத்துடன் ஒப்பிடும்போது தொழிலாளர்களின் உண்மையான வருமானம் வறுமைக் கோட்டிற்குக் கீழேயே உள்ளது. பொருளாதார நிபுணர்களின் தரவுகளின்படி, நாம் பொருளாதார ரீதியாகவும் மனிதவள மேலாண்மையிலும் முற்றிலும் தவறிவிட்டோம். தற் போதைய பொருளாதாரச் சூழலில் அதிகரித்து வரும் விலைவாசி உயர்வுக்கு ஏற்ப ஊதியம் அமையாததால், உழைக்கும் மக்கள் நாளுக்கு நாள் வறுமையின் பிடியில்

தொடர்ச்சி: பக்கம் 13




**இறுதிப்பாகம்**

சர்வதேச சட்டம் அந்தக் கேள்விக்கு ஒரு எளிமையான பதிலை அளிக்கவில்லை. அது சுயநிர்ணய உரிமையை மக்களின் உரிமையாகத் தெளிவாக அங்கீகரிப்பதோடு, அரச இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கிறது. சர்ச்சைக்குரிய கேள்வி என்னவென்றால், மரபுசார் காலனித்துவ நீக்கத்திற்கு வெளியே, போதுமான அளவு கடுமையான ஒடுக்குமுறைக்கு உள்ளான அல்லது அர்த்தமுள்ள உள் சுயநிர்ணய உரிமை தொடர்ந்து மறுக்கப்பட்ட ஒரு மக்கள், வெளி சுயநிர்ணய உரிமை அல்லது தீர்வுக்கான பிரிவினை உரிமையைப் பெற முடியுமா என்பதுதான். அந்தக் கோட்பாடு சர்வதேச சட்டத்தின் பொது விதியாக நிறுவப்படாமல், இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளது.



சர்வதேச நீதிமன்றம் தனது கொசோவோ ஆலோசனைக் கருத்தில் இதை குறிப்பாகத் தெளிவுபடுத்தியது. சுயநிர்ணய உரிமைக்கான சர்வதேச சட்ட உரிமையின் வளர்ச்சியை நீதிமன்றம் அங்கீகரித்தபோதிலும், அங்கீகரிக்கப்பட்ட காலனித்துவ அல்லது அந்நிய ஆதிக்கச் சூழல்களுக்கு வெளியே, தற்போதுள்ள ஒரு அரசிலிருந்து பிரிந்து செல்வதற்கான உரிமையை சர்வதேச சட்டம் வழங்குகிறதா என்பது குறித்தும், பரிகாரப் பிரிவினைக்கான கோட்பாடு உண்மையில் உள்ளதா என்பது குறித்தும் முற்றிலும் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுவதாகப் பதிவு செய்தது. முக்கியமாக, கொசோவோ நடவடிக்கைகளில் அந்தக் கேள்விகளுக்குத் தீர்வு காண்பது அவசியமில்லை என்று நீதிமன்றம் தீர்மானித்தது.

பொதுவான சர்வதேச சட்டத்தில் சுதந்திரப் பிரகடனங்களுக்கு எதிராகப் பொருந்தக்கூடிய தடை எதுவும் இல்லை என்று நீதிமன்றம் தனியாக முடிவு செய்தது; ஆனால் அந்த முடிவை, பிரிந்து செல்வதற்கான ஒரு நேர்மறையான சட்ட உரிமையை அங்கீகரிப்பதோடு குழப்பிக்கொள்ளக் கூடாது.



தமிழீழத்திற்காக ஒரு வலுவான சட்ட வாதத்தை முன்வைப்பதற்கு அந்த வேறுபாடு முக்கியமானது, ஏனெனில் ஈழத் தமிழர்களுக்குத் தானாகவே சுதந்திரம் அளிக்கும் ஒரு எளிய விதி சர்வதேச சட்டத்தில் ஏற்கனவே உள்ளது என்று வாதிடுவதன் மூலம் இந்த வழக்கை வலுவிழக்கச் செய்யக்கூடாது. அது அவ்வாறு இல்லை. மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை சர்வதேச சட்டம் அங்கீகரிக்கிறது, அதே சமயம் அர்த்தமுள்ள உள் சுயநிர்ணய உரிமையை நீண்டகாலம் மறுப்பதன் சட்டரீதியான விளைவுகள் சர்ச்சைக்குரியதாகவே உள்ளன, மேலும் பரிகாரத்திற்கான வெளி சுயநிர்ணய உரிமையின் சாத்தியக்கூறு சர்வதேச நீதிமன்றத்தால் இன்னும் திட்டவட்டமாகத் தீர்க்கப்படவில்லை என்பதே வலுவான வாதமாகும்.

செல்வி **ரேணுகா இன்பக்குமார்**
வழக்கறிஞர், அவுஸ்திரேலியா.
பேச்சாளர், தமிழ் ஏதிலிகள் கழகம்.

எனவே, தமிழ் ஈழ ஆதரவாளர்களின் வாதம் பல்வேறு காரணிகளை உள்ளடக்கிய ஒரு கூட்டு வாதமாக அமைய வேண்டும். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் ஈழத் தமிழர்கள் ஒரு தனி 'மக்களாக' (people) அங்கீகரிக்கப்படத் தகுதியானவர்களா; வடக்கு-கிழக்குடனான அவர்களின் வரலாற்று மற்றும் நிலப்பரப்பு ரீதியான உறவு; அவர்களுக்கு அர்த்தமுள்ள உள்-சுயநிர்ணய உரிமை (internal self-determination) வழங்கப்பட்டிருந்ததா; மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு முயற்சிகளின் வரலாறு மற்றும் அவற்றின் செயல்திறன்; தமிழ் தாயகத்தின் நிலம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு தொடர்பான கேள்விகள்; மையப்படுத்தப்பட்ட இராணுவ மற்றும் பாதுகாப்பு அதிகாரத்தின் அளவு; மற்றும் கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் ஆகியவற்றை ஆராய்வது இதில் அடங்கும். இக்காரணிகள் ஒவ்வொன்றும் தனித்தனியாகப் பிரிந்து செல்வதற்கான (secession) சட்டப்பூர்வ உரிமையை உடனடியாக வழங்கிவிடாது; ஆனால், இவை அனைத்தும் ஒன்றிணைந்து, வெளி-சுயநிர்ணய உரிமைக்கான (external self-determination) கோரிக்கையை ஆராய்வதற்கான உண்மையான மற்றும் சட்டப்பூர்வமான சூழலை உருவாக்குகின்றன.



தமிழ் ஈழம் என்பது ஒரு எல்லைக்கோட்டைத் தாண்டிய விடயம் எனவே, தமிழ் ஈழத்திற்கான கோரிக்கையை வெறும் புதிய கொடி, புதிய எல்லை அல்லது மற்றொரு நாட்டிற்கான சர்வதேச அங்கீகாரம் கோருவதாக மட்டும் புரிந்துகொள்ளக் கூடாது. அதன் ஆழமான நிலையில், இது அரசியல் அதிகாரத்தை (political agency) மையமாகக் கொண்டது: அதாவது, தங்கள் தாயகம் எவ்வாறு நிர்வகிக்கப்பட வேண்டும், தங்கள் நிலம் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும், தங்கள் வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும், தங்கள் சமூகங்களை எந்த நிறுவனங்கள் நிர்வகிக்க வேண்டும், பாதுகாப்பு மற்றும் காவல் பணிகள் எவ்வாறு செயல்பட வேண்டும், தங்கள் மொழி மற்றும் கலாச்சாரம் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும், மற்றும் பரந்த சர்வதேச சமூகத்துடன் என்ன வகையான அரசியல் உறவை அவர்கள் கொண்டிருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஈழத் தமிழர்களுக்கு உள்ளதா என்பதே இதன் சாராம்சம்.

இக்கோணத்தில் பார்க்கும்போது, 'தியாக தீபம்' லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்து கோரிக்கைகள் மேலும் முக்கியத்துவம் பெறுகின்றன; ஏனெனில், ஒவ்வொரு கோரிக்கையும் அர்த்தமுள்ள அரசியல் அதிகாரத்தின் ஒரு முக்கிய அங்கத்தைச் சார்ந்ததாகவே இருந்தது. முதலாவது கோரிக்கை, தமிழர்களின் சுதந்திரத்தின் மீது அரசு செலுத்திய கட்டாய அதிகாரத்தை எதிர்த்தது; இரண்டாவது, தமிழ் தாயகத்தின் நிலப்பரப்புத் தன்மையை வலியுறுத்தியது; மூன்றாவது, வெளியிலிருந்து திணிக்கப்பட்ட நிர்வாகத்திற்குப் பதிலாகத் தமிழர்களின் அரசியல் நிர்வாகத்தைக் கோரியது; நான்காவது, வடக்கு-கிழக்கு முழுவதும் மத்திய பாதுகாப்பு அதிகாரத்தின் விரிவாக்கத்தை எதிர்த்தது; ஐந்தாவது, இராணுவமயமாக்கப்பட்ட தமிழ் சிவில் பகுதிகளை மீண்டும் மக்களிடம் ஒப்படைக்குமாறு கோரியது. எனவே, இந்த ஐந்து கோரிக்கைகளும் ஒரு முக்கிய அரசியல் கோட்பாட்டில் ஒன்றிணைந்தன: அதாவது, தமிழர்கள் தங்கள் கூட்டு வாழ்வின் சூழல்கள் மீது அர்த்தமுள்ள அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே அது.



அரசியல் புரிதல் இல்லாத நினைவுகூரல் ஏன் போதுமானதல்ல என்பதற்கான காரணமும் இதுவேயாகும். போராட்டத்திலிருந்து துண்டிக்கப்பட்ட வெறும் குறியீட்டுச் செயலாக நினைவுகூரல் மாறிவிடக்கூடாது என்று நமது முந்தைய சிந்தனை எச்சரித்தது; அத்துடன், நினைவுகூரலுக்குப் பின்னால் உள்ள அரசியல் நோக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டிய புலம்பெயர் சமூகத்தின் பொறுப்பையும் அது வலியுறுத்தியது. அரசியல் கைதிகள், நிலம், தமிழருக்கான அரச அதிகாரம், இராணுவமயமாக்கல் மற்றும் சுயநிர்ணய உரிமை ஆகியவை குறித்து விவாதிக்க மறுத்துக்கொண்டே 'தியாக தீபம்' லெப்டினன்ட் கேணல் திலீபனை நினைவுகூர்வது என்பது, அந்தத் தியாகத்திற்குப் பொருளை அளித்த அரசியல் உள்ளடக்கத்தை நீக்கிவிட்டு அத்தியாகத்தை நினைவுகூர்வதற்கே சமமாகும்.

முப்பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த ஐந்து கோரிக்கைகளின் முக்கியத்துவம் என்பது, ஒவ்வொரு தனிப்பட்ட கோரிக்கையும் நிறைவேற்றப்பட்டதா என்பதை மட்டும் பார்ப்பதில் இல்லை; மாறாக, ஈழத் தமிழர்களின் சுதந்திரம், நிலம், ஆட்சி மற்றும் பாதுகாப்பு தொடர்பான விவகாரங்கள் இனி தங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிறுவனங்களின் விருப்பத்தைச் சார்ந்திருக்காமல் இருப்பதை உறுதிசெய்யும் அளவிற்கான அரசியல் அதிகாரம் அவர்களிடம் இப்போது உள்ளதா என்பதை ஆராய்வதிலேயே உள்ளது. 1987-ஆம் ஆண்டையும் 2026-ஆம் ஆண்டையும் இணைக்கும் ஆழமான கேள்வி இதுவே; சீர்திருத்தம், நல்லிணக்கம் அல்லது வரையறுக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு குறித்த தொடர்ச்சியான வாக்குறுதிகள், உண்மையான சுயநிர்ணய உரிமைக்கு ஒருபோதும் நிரந்தர மாற்றாக அமைய முடியாது என்று தமிழ் ஈழ ஆதரவாளர்கள் வாதிடுவதற்கு இந்தக் கேள்வியே அடிப்படையாக அமைகிறது.

**தொடர்ச்சி: பக்கம் 14**




வேல்ஸில் இருந்து **அருஸ்**

அமெரிக்காவுக்கு ஈரான் போல ஹூதிகளுக்கு சவுதி அரேபியா மாறிவருகின்றது. ஹூதிகளின் உத்திகளில் ஒன்று, கண்ணிவெடிகள் பதிக்கப்பட்ட பாதைகளில் செல்லும் வாகன அணிவகுப்புகளை மறைந்திருந்து தாக்குவதாகும். இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் மோர்டார் குண்டுகளை மழையாகப் பொழிந்து பீதியை உருவாக்குவதன் மூலம், அந்த அணிவகுப்புகளை எளிதில் தாக்கக்கூடிய இலக்குகளாக அவர்கள் மாற்றுகிறார்கள்.



இது சவுதி ஆதரவுப் படைகளின் முன்னேற்றத்தை வெகுவாகக் குறைத்துள்ளது; கணிசமான வான்வழி ஆதரவு இருந்தபோதிலும், அப்படையினர் தங்கள் நிலைகளை உறுதிப்படுத்திக்கொள்ளவே சிரமப்படுகிறார்கள். இருப்பினும் மோதல்கள் தொடர்கின்றன, இரு தரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

சவுதியின் உள்கட்டமைப்பு மீதான தாக்குதல்கள், ஏமனில் உள்ள அவர்களின் கூட்டாளிகளுக்குக் கவலையை அளிப்பதோடு, படைகளின் மன உறுதியையும் குறைக்கின்றன.



சில வாரங்களுக்கு முன்பு சவுதி அரேபியாவால் அமைக்கப்பட்ட கடற்படைக் கூட்டணியை ஐரோப்பியர்கள் முற்றிலுமாகப் புறக்கணித்தனர், அவர்கள் ட்ரம்பிடமிருந்து ஒரு சமிக்ஞைக்காகக் காத்திருப்பதாகக் கூறினர். யேமன் மீது குண்டு வீசுமாறு ட்ரம்பிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகளும் ஒன்றுக்கு மேற்பட்ட முறை மறுக்கப்பட்டன. மேற்கத்திய நாடுகள் சவூதியர்களுடனான தங்கள் கூட்டணியைக் கைவிட்டுவிட்டதா என்றால் இல்லை. ஆனால் இந்தத் தருணத்தில் மேற்கத்திய நாடுகள் எதுவும் செய்ய முடியாது. இஸ்ரேல் போன்ற நவீன இராணுவ வலிமை கொண்ட நாட்டின் துணையுடன் உலகின் வல்லரசு நாடே களமிறங்கியும், ஈரானை வீழ்த்த முடியவில்லை. ஈரான் தனது அரசாங்கத்திற்கான ஆதரவை ஒருங்கிணைத்துக்கொண்டு, உலகின் மிகப்பெரிய வல்லரசுக்கு எதிராக உறுதியாக நின்றது; அத்துடன், 'வளைத்துத் தாக்கும்' (encirclement) என்ற மிகவும் போற்றப்பட்ட அமெரிக்கக் கோட்பாட்டின் தூண்களாகத் திகழ்ந்த அமெரிக்கத் தளங்களையும் அது அழித்தது.

அந்த அமெரிக்கக் கோட்பாடு முதல் சோதனையிலேயே தோல்வியடைந்தது. பல ஆண்டுகளுக்கு முன்பு, வான்வழி ஆதரவுடன் கூடிய 30 கப்பல்களைக் கொண்ட ஒரு படை, ஹூதிகளுக்கு எதிராக அந்த நீரிணைப் பகுதியில் ஆதிக்கம் செலுத்த முயன்றது. ஆனால் அதுவும் தோல்வியில் முடிந்தது.

மேற்கத்திய நாடுகள் சவுதி அரேபியாவைக் கைவிட்டு விட்டனவா என்பது கேள்வியல்ல; மாறாக, ஏற்கனவே செய்தவற்றைத் தாண்டி மேற்கத்திய நாடுகளால் இனி என்ன செய்ய முடியும் என்பதே கேள்வி. ஏமனில் ஹூதிகள் மூலமாக ஈரான் தனது பிரம்மாண்டமான ஏவுகணை மற்றும் ஆளில்லா விமான தொழில்நுட்பத்தை விரிவுபடுத்தி வருகின்றது. இத்துறையில் மேற்கத்திய நாடுகள் இன்னும் மெதுவான வேகத்திலேயே முன்னேறி வருகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் போரில் தங்களை ஈடுபடுத்திக்கொண்ட சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கு ஹூதிகள் ஒரு பெரும் சவாலாக மாறியுள்ளனர்.



உலகின் மிகத் தீவிரமாகப் பிற நாடுகளின் விவகாரங்களில் தலையிடும் நாடாக மாறியுள்ள ஐக்கிய அரபு அமீரகம், ஏமன் விவகாரத்தில் பின் சல்மானுடன் கருத்து வேறுபாடு கொண்டு, சவுதிக்கு ஆதரவாக மீண்டும் போரில் ஈடுபடுவதைத் தவிர்க்க முயல்கிறது. இருப்பினும், அவர்களால் தங்களை இதிலிருந்து முழுமையாக விடுவித்துக்கொள்ள முடியாது. ஏமனின் தற்போதைய நிலைக்குக் காரணமான முக்கிய நிதியுதவியாளர்களாகவும், தலையீடு செய்தவர்களாகவும் அவர்களே இருந்தனர்.



இந்தப் போர் ஏற்படுத்தவுள்ள பொருளாதார இழப்புகளின் அளவைக் கண்டு சவுதி அரேபியா அதிர்ச்சியடைந்துள்ளது; ஆனாலும், தாக்குதலைத் தொடரத் தேவையான வளங்கள், சுமார் 1,50,000 வீரர்களைக் கொண்ட படை மற்றும் மிகப்பெரிய வான்படை ஆகியவை அவர்களிடம் உள்ளன. அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம், இதனால் ஏற்படக்கூடிய மிகப்பெரிய பொருளாதாரச் சேதத்தை ஏற்றுக்கொள்வது மட்டுமே. அவர்கள் அதை ஏற்றுக் கொண்டனர், ஆனால் இப்போது மீண்டும் பரிசீலித்து வருகின்றனர். ட்ரம்ப் மீதோ அல்லது மேற்கத்திய நாடுகள் மீதான நம்பிக்கையை அவர்கள் இழந்துள்ளனர். பாகிஸ்தான் மற்றும் துருக்கி தங்களின் சமீபத்திய பாதுகாப்பு ஏற்பாடுகளின் கீழ் வழங்கும் ஆதரவுடன் கூட, பல மாதங்கள் நீடிக்கும் ஒரு நீண்டகால, அதிகத் தீவிர வான்வழித் தாக்குதலுக்குத் தேவையான வெடிமருந்துகள் சவூதி ஆயுதக் கிடங்குகளில் இருப்பதாகத் தெரியவில்லை.

சனிக்கிழமை தாக்குதல் மற்றும் ஞாயிற்றுக்கிழமை நடந்த தாக்குதல்களுக்கு பிற்கு, அந்த இராச்சியத்தில் பதற்றம் மற்றும் பாதுகாப்பற்ற சூழல் நிலவியது. இந்தத் தாக்குதல்கள் நாட்டின் பொருளாதார மையத்தையும் அதன் குடிமை உள்கட்டமைப்பையும் தாக்கி, சவுதி அரேபியா உலகிற்குக் காட்ட முயன்ற பாதுகாப்பு உணர்வை உலுக்கின. அமெரிக்க வான் பாதுகாப்பு அமைப்புகளில் பில்லியன் கணக்கில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு அந்த நாடு எளிதில் பாதிக்கப்படக்கூடியதாக நிரூபிக்கப்பட்டது.



ஏமனில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணைகளைத் தடுத்து அழிப்பதில் சவுதியின் பேட்ரியாட் (Patriot) மற்றும் தாட் (THAAD) அமைப்புகள் தோல்வியடைந்தன. இந்தத் தோல்விக்கான பொறுப்பை அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் மீது சுமத்த முயற்சி மேற்கொள்ளப்படலாம் என்று கருதப்படுகிறது. தகவல்களின்படி, ஹூதிகளால் ஏவப்பட்ட பாலிஸ்டிக் ஏவுகணைகளைச் சவுதியின் வான் பாதுகாப்பு அமைப்புகளான பேட்ரியாட் PAC-3 மற்றும் தாட் ஆகியவற்றால் இடைமறித்து அழிக்க முடியவில்லை; இதனால் அந்த ஏவுகணைகள் தங்கள் இலக்குகளைத் தாக்கின.

இப்பகுதியில் உண்மையான அமைதி திரும்புவது ட்ரம்ப் மற்றும் IRGC (ஈரானிய புரட்சிகர காவலர் படை) இடையிலான புரிதலைப் பொறுத்தது; ஆனால் அத்தகைய புரிதல் ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைவு. மற்ற அனைவரும் இரண்டாம் நிலை பங்கேற்பாளர்களே. மாதக்கணக்கில் நீடிக்கும் ஒரு மோதலுக்குத் தேவையான குண்டுகளோ அல்லது இடைமறித்து அழிக்கும் ஏவுகணைகளோ (interceptors) சவுதியிடம் இல்லை. ஒருவேளை அவை இருந்திருந்தாலும், அதனால் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படாது.



ஒரே நேரத்தில் வரும் ஏராளமான ட்ரோன்கள் மற்றும் பல வகையான ஏவுகணைகளை இடைமறித்து அழிப்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. ஆனால், ஹூதிகளுக்கு எதிராக முழு வீச்சில் போரிடவும், தங்கள் சொந்த ராணுவத்தைத் திரட்டவும், கூடுதலாக 2,50,000 வீரர்களைப் போர்க்களத்திற்கு அனுப்பவும், அதன் மூலம் ஒரு நீண்ட மற்றும் ஆழமான போரில் ஈடுபடவும் சவுதி

தொடர்ச்சி: பக்கம் 14

## தமிழ்ப் பெண்மையின் ... தொடர்ச்சி...

நினைவு இன்னும் நிலைத்திருக்கிறதா என்பது மட்டு மல்ல; மாறாக, அவர் எதன் அடையாளமாகத் திகழ்ந் தாரோ, அந்த மாற்றமானது அர்த்தமுள்ள வகையில் பாதுகாக் கப்பட்டிருக்கிறதா என்பதுதான்.

எனவே, 'தமிழ் பெண்கள் எழுச்சி நாள்' நினைவு கூரல் என்பது வெறும் வரலாற்று நிகழ்வாக மட்டும் நின்று விடாமல், இன்று பெண்கள் எதிர்கொள்ளும் அரசியல் மற்றும் சமூகச் சூழல்களை ஆராயும் ஒரு நிகழ்வாகவும் அமைய வேண்டும். ஆணாதிக்கத் தலை மைத்துவக் கட்டமைப்புகளை எதிர்த்தல், சாதியப் பாகு பாட்டை எதிர்கொள்ளுதல், கடுமையான மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் பெண் களுக்கு ஆதரவளித்தல் மற்றும் தங்கள் தேசத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்கான உண்மையான வாய்ப்பு கள் இளம் தலைமுறையினருக்கு இருப்பதை உறுதி செய்தல் ஆகியவற்றை இது கோருகிறது.

தமிழ் ஈழத்திற்கான போராட்டத்தை பெண்களின் விடுதலைக்கான போராட்டத்திலிருந்து பிரிக்க முடியாது; ஏனெனில், ஒரு தேசத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிப் பதில் அதன் மக்கள் தொகையில் குறிப்பிடத்தக்க பகுதி யினர் அர்த்தமுள்ள பங்கேற்பிலிருந்து விலக்கி வைக்கப் பட்டிருக்கும்போது, அந்தத் தேசத்தின் அரசியல் சுதந்திரம் முழுமையற்றதாகவே இருக்கும். இரண்டாம் லெப்டினன்ட் மாலயின் வரலாற்று முக்கியத்துவம் என்பது தமிழ் பெண்மை குறித்த எதிர்பார்ப்புகளில் ஏற்பட்ட மாற்றத்தில் அடங்கியுள்ளது; அதேவேளையில், இந்த மாற்றம் வெறும் நினைவுப் பேருரைகள் அல்லது வரலாற்றுப் பதிவுகளுக்குள் மட்டும் முடங்கிவிடாமல் இருப்பதை உறுதி செய்வதே தற்காலத் தலைமுறையினரின் பொறுப்பாகும்.

தாயகத்தில் நீதிக்காகத் தொடர்ந்து குரல் கொடுக் கும் பெண்கள், புலம்பெயர் தேசங்களில் அரசியல் முன் னெடுப்புகளை ஒருங்கிணைக்கும் பெண்கள் மற்றும் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைச் சவால் செய்யும் இளம் பெண்கள் என அனைவரும், அங்கீகரிக்கப்பட்டு வலுப்படுத் தப்பட வேண்டிய ஒரு தொடர்ச்சியான அரசியல் பங்கேற்பு வரலாற்றின் அங்கமாவார்கள்.

எனவே, மாலயை அர்த்தமுள்ள வகையில் கௌர விப்பது என்பது, அவரது இறப்புச் சூழலை நினைவுகூர்வது மட்டுமல்ல; மாறாக, அவரது தலைமுறை வெளிப்படுத்திய சாத்தியக்கூறுகளை அங்கீகரிப்பதும், அச்சாத்தியக்கூறுகள் இன்றும் பெண்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்வதுமே ஆகும்.

இரண்டாம் லெப்டினன்ட் மாலக்கான மிகச்சிறந்த அஞ்சலி என்பது, அவரது பெயரில் நடத்தப்படும் நினைவேந் தல் நிகழ்வுகளின் எண்ணிக்கையைக் கொண்டு அளவிடப் படுவதல்ல; மாறாக, தமிழ் பெண்கள் எந்தளவுக்கு உண்மை யான அரசியல் அதிகாரத்தைச் செலுத்த முடிகிறது, பாகு பாடின்றி வாழ முடிகிறது மற்றும் தங்கள் தேசத்தின் எதிர் காலத்தைத் தீர்மானிப்பதில் சமமாகப் பங்கேற்க முடிகிறது என்பதைக் கொண்டே அது அளவிடப்படும்.

அவரது தலைமுறை பொதுச் சமூகத்தின் கவனத் திற்குக் கொண்டுவந்த தமிழ் பெண்மை சார்ந்த புரட்சி இன்னும் முழுமையடையவில்லை; அதன் முழுமை என்பது கடந்த காலத் தியாகங்களை மட்டும் சார்ந்ததல்ல, மாறாகப் பெண்களின் சுதந்திரத்தைத் தொடர்ந்து கட்டுப்படுத்தும் ஏற்றத்தாழ்வுகளை எதிர்கொள்ளும் தற்காலத் தலை முறையின் மன உறுதியையும் சார்ந்ததே ஆகும்.

இரண்டாம் லெப்டினன்ட் மாலயின் மரபு என்பது தமிழீழத்தின் வரலாற்றிற்கு மட்டுமல்ல, அதன் எதிர் காலத்திற்கும் உரியதாகும்; அந்த எதிர்காலம் என்பது, தமிழ் பெண்கள் தங்கள் சொந்த தேசத்தின் விதியைத் தீர்மானிக் கும் செயற்பாட்டில் ஒருபோதும் ஓரங்கட்டப்படக் கூடாது என்ற நிலையை உறுதி செய்வதாக அமைய வேண்டும்.

• • •

## படுகொலைகளையும் அழிவு ... தொடர்ச்சி...

தமிழர்கள் ஆதியாக வாழ்ந்தார்கள் எனபதை நிரூபிக்கும் வகையிலான வரலாற்று ஆதாரங்கள் காட்டப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் வீரமுனைபோன்று பல்வேறு வரலாற்றுக்கிராமங்கள் காணப்படுகின்றன.சில கிராமங்கள் தமது வரலாற்றினை ஆய்வுக்குட்படுத்தி வெளி யிட்டுவரும் நிலையில் சில கிராமங்கள் அழிந்துசெல்லும் நிலையே காணப்படுகின்றது.

இவற்றினை மீட்டு எதிர்கால சந்ததிக்கு கொண்டு செல்லும் பொறுப்பு இன்றைய தமிழ் தேசியத்தில் பயணிக்கும் அனைவருக்கும் இருக்கின்றது.இதன்மூலம் அம்பாறை மாவட்டத்தின் முழுமையான வரலாறுகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு நூலாகவோ அல்லது வேறு தொழில்நுட்பங்கள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு கொண்டுசெல்லப்படவேண்டும்.

வடகிழக்கின் வரலாற்றை நடுநிலையுடனும், அறிவியல் சான்றுகளுடனும் எழுத சில முக்கியமான படிநிலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சர்வதேசத் தரத்திலான தொல்லியல் ஆய்வாளர்களைக் கொண்டு வடகிழக்கின் கடலோரப் பகுதிகள் மற்றும் தொல்லியல் மேடுகளில் முறையான அகழ்வாராய்ச்சிகளை நடத்த வேண்டும். போர்த்துகல், நெதர்லாந்து மற்றும் லண்டன் ஆகிய இடங்களிலுள்ள காப்பகங்களில் உள்ள பண்டைய வரைபடங்கள், வர்த்தகப் பதிவுகள் மற்றும் நிர்வாக ஆவணங்களை ஆய்வு செய்வதும், தமிழ்நாட்டின் சோழ, பாண்டிய கால கல்வெட்டுகள் மற்றும் ஈழத்துத் தமிழ் இலக்கியங்களோடு ஒப்பிட்டு வரலாற்றுத் தொடர்ச்சியை நிறுவுவதும் அவசியமாகும்.

தமிழர்களின் இறையாண்மை, சுயநிர்ணய உரிமை மற்றும் வரலாற்றுத் தொடர்ச்சி ஆகியவற்றுக்கான அடிப்படை சான்றாக வடகிழக்கு தமிழர் தாயகத்தின் வரலாறு திகழ்கிறது. "வரலாறு என்பது வெற்றி பெற்ற வர்களால் எழுதப்படுகிறது" என்ற கூற்றை மாற்றி, உண்மைகளின் அடிப்படையில் வடகிழக்கின் வரலாற்றுப் பக்கங்கள் முழுமையாகவும் துல்லியமாகவும் மீண்டும் எழுதப்பட வேண்டும். இதுவே எமது பண்பாட்டு மரபையும் நிலத்தையும் வருங்கால சந்ததியினருக்குப் பாதுகாத்துத் தருவதற்கான தலையாய கடமையாகும்.

## மலையக மக்களின் ... தொடர்ச்சி...

சிக்கித் தவிக்கின்றனர். முறையான மனிதவளக் கொள் கைகள் மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு இல்லாமல் இத்துறையைத் தொடர்வது தொழிலாளர்களின் வாழ்வா தாரத்தைப் பேரழிவிற்குள்ளாக்கும்.

இலங்கையின் பெருந்தோட்டத் துறை எதிர்கொள் ளும் இந்தச் சமூக-பொருளாதார நெருக்கடி என்பது வெறும் தொழிலாளர் பற்றாக்குறை சார்ந்த பிரச்சினை மட்டுமல்ல. இது மனித உரிமைகள் மற்றும் சுயமரியாதை சார்ந்த ஒரு தேசியப் பிரச்சினையாகும். இலங்கையின் ஏனைய பகுதிகளில் வீடுகளில் வசிக்கும் மக்கள் நாளாந்தம் தங்களது தொழிலுக்காக வெளியில் செல்கின்றனர் ஆனால் மலையகப் பெருந்தோட்ட மக்கள் மாத்திரம் தாங்கள் தொழில் செய்யும் இடத்திலேயே தங்கியுள்ளனர்.

குறிப்பாக பெருந்தோட்ட மக்கள் தங்களது வீட்டின் கதவுகளை திறக்கும் போது அவர்கள் பணியாற்றும் இடம் காணப்படுகிறது.அவ்வாறு உழைக்கும் மக்களுக்குப் போதிய ஊதியமோ, நில உரிமையோ, சமூக சுயமரியாதையோ உறுதிப்படுத்தப்படாத வரை எமது நாட்டின் பாரம்பரியத் தொழிற்றுறையான தேயிலைத் துறையைக் காப்பாற்ற முடியாது. முறையான கட்டமைப்பு மாற்றங்களும், தொழிலாளர்களின் நலன்சார்ந்த கொள்கை முடிவுகளும் எடுக்கப்படாவிட்டால், மலைநாட்டின் அடையாளமாக விளங்கும் தேயிலைத் தோட்டங்கள் எதிர்காலத்தில் முற்றி லும் மனிதவளமின்றி அழியும் அபாயம் ஏற்படும்.

• • •

## ஈழ மண்ணில் இந்தியப் ... தொடர்ச்சி...

34. செபஸ்தியன் தம்பிராஜா, கூட்டுறவுச்சங்க ஊழியர்,(55 வயது)
35. செல்லையா தங்கமணி, (58 வயது)
36. செல்லர் சிவபுரம், கமம், (48, வயது)
37. வேலுப்பிள்ளை சரவணமுத்து,(60வயது)
38. ஞானப்பிரகாசம் செந்தூர்முருகன், வியாபாரம், (40 வயது)
39. சுப்பிரமணியம் ஜெயமோகன், வியாபாரம்,(32 வயது)
40. சத்தியசீலன் ஜெயசீலன்,மாணவன், (17வயது)
41. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை,(75வயது)
42. சின்னவி சின்னத்துரை,(57 வயது)
43. சிவலை குணரட்ணம்,தபால்ஊழியர், (49வயது)
44. சூடாமணி அவுடையம்மா குடும்பப்பெண், (55 வயது)
45. இராஜதுரை மகேஸ்வரி, (46 வயது)
46. இராயப்பு சூசைப்பிள்ளை,ஒய்வூதியர், (74 வயது)
47. இராமசாமி இலங்கேஸ்வரன்,(25 வயது)
48. இராசு சுப்பிரமணியம்,(46 வயது)
49 .நடராஜா ஜெயசீலன்,(21 வயது)
50 .கந்தையா நவரட்ணம்,(50 வயது)
51. கந்தையா சிவராஜா, (25வயது)
52. கிருபாகரன் இந்திராணி, (32 வயது)
53. பஸ்தியாம்பிள்ளை யோன்அரியமலர்,(60 வயது)
54. பஸ்ரியாம்பிள்ளை நொய்லா விஜயந்தி, (20வயது)
55. துரைச்சாமி இராஜேந்திரா,ஓய்வூதியர்,(70 வயது)
56. துரைச்சாமி மகேந்திரா,(73 வயது)
57. துரைச்சாமி ஆறுமுகம், (72 வயது)
58. தம்பிப்பிள்ளை கனகலிங்கம்,(64,வயது)
59. தம்பிப்பிள்ளை கிருபாகரன்,(33 வயது)
60 .தியாகராசா மதியரசன,(17வயது)

**காயமடைந்தவர்களின் விபரம்:**

01. யூலியஸ் பிரதீபன்,குழந்தை ,(06 மாதம்)
02. ந.அன்னம்,முதியவர், (90 வயது)
03. நா.நவரத்தினம்,தொழிலாளி,(54வயது)
04. நா.செல்லையா,தொழிலாளி,(21,வயது)
05. நடராசா தனபாலசிங்கம், கடை. (20 வயது)
06. நவரத்தினம் சந்திரகுமார், தொழிலாளி, (18,வயது)
07. பூ.விஸ்ணுதாசன்,(34,வயது)
08. பத்மநாதன் தனபாக்கியலட்சுமி, குடும்பப்பெண்(43,வயது)
09. பற்குணராஜா கமலா, மாணவி,(25,வயது)
10. தா.இராசேந்திரன், தொழிலாளி, (44,வயது)
11. மா.அன்னலட்சுமி, வீட்டுப்பணி,(75, வயது)
12. அ. சண்முகராசா வியாபாரம், (26 வயது)
13. அ.கந்தசாமி, கிளினர்,(36, வயது)
14. கே.பாலையா,எலக்ரீசியன்,(44, வயது)
15. செ. பத்மநாதன்,முகாமையாளர்,(46 வயது)
16. செ.தவராஜன்,கமம், (22, வயது)
17. சின்னப்பொடி தெய்வானை,(65, வயது)
18. வா.மதிஜீவன், சாரதி, (23, வயது)
19. ராஜரட்ணம் ஜனார்த்தனன், மாணவன், (20 வயது)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, இலங்கை யின் வட மாகாணத்தில் மக்கள் அடர்ந்து வாழும் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு அடிப்படை மற்றும் உயர்தர மருத்துவ வசதிகளை வழங்கும் ஒரேயொரு மருத்துவமனை ஆகும். யாழ்ப்பாண நகர மத்தியில் அமைந்திருந்தது. ஈழப்போர்க் காலம் முழுவதும் இப்பகுதி போரில் ஈடுபடுபவர்கள் அணுகாத வண்ணம் பாதுகாக்கப் பட்ட ஒரு மருத்துவமனையாக இயங்கி வந்தது.

ஆனால் இந்திய இராணுவத்தின் கொலைவெறித் தாக்குதல் வைத்தியசாலையையும் விட்டுவைக்கவில்லை என்பதே வரலாறு இன்று 2026, அக்டோபர் 39, ஆண்டு

• • •

## 'மதம்' பிடிக்கும் மதவாதம்... தொடர்ச்சி...

செய்வதற்கான சுதந்திரமும் கண்ணியமான நடத்தையும் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

ஆனால், குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்ட ஒரு நபரை 'துறவி' என்ற காரணத்திற்காகப் பிரத்யேகமாகப் பிரித்து வைப்பதும், அவரை விடுவிக்க அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதும் நீதித்துறை நிர்வாகத்தில் மத நிறுவனங்கள் நேரடியாகத் தலையிடும் அபாயகரமான போக்கைக் காட்டுகிறது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய அஸ்கிரி பீடத்தின் மகா நாயக்க தேரர் வராகொட ஞானரத்ன தேரர் மற்றும் அனுநாயக்க தேரர் நாரம்பனாவே ஆனந்த நாயக்க தேரர் ஆகியோரிடம் தெரிவிக்கையில், 'ஞானசார தேரர் விவகாரம் நீதிமன்றத்துடன் தொடர்புடையது அரசியலமைப்பின் பிர காரம் ஜனாதிபதி சிறந்த தீர்மானத்தை எடுப்பார்' எனக் குறிப்பிட்டிருந்தாலும், வரலாற்று ரீதியாக இலங்கையின் அரச தலைவர்கள் மகா சங்கத்தினரின் பேரினவாத அழுத் தங்களுக்குப் பணிந்து நீதித்துறையின் முடிவுகளை மாற்றியமைத்த வரலாறே அதிகமுள்ளது.

இலங்கை அரசு மற்றும் நீதித்துறை நிர்வாகம் இத்தகைய மதவாத அழுத்தங்களுக்குத் தொடர்ந்தும் துணைபோகுமாயின், அது நீதித்துறையின் சுயாதீனம் முற்றிலும் சீர்குலைவதற்கே வழிகோலும். உயர் நீதிமன்றம் ஒரு ஜனாதிபதி பொதுமன்னிப்பை 'சட்டவிரோதமானது' என்று இரத்து செய்த பின்னரும், மீண்டும் அதே நபருக்கு அரசியல்-மத அழுத்தங்கள் காரணமாகப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டால், அது நாட்டின் மிக உயர்ந்த நீதிமன்றத்தின் அதிகாரத்தையும் நம்பகத்தன்மையையும் முழுமையாக அழித்துவிடும்.

சட்டத்தின் ஆட்சி பலவீனமடையும்போது, மதத்தின் பெயரால் நிகழ்த்தப்படும் வெறுப்புப் பேச்சுகள், இனவாதத் தூண்டல்கள் மற்றும் வன்முறைகள் 'புனிதமானவையாக' சித்திரிக்கப்பட்டு, குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளும் கலாசாரம் உருவெடுக்கும்.

பௌத்த பேரினவாதம் சட்டத்தையும் மீறிச் செயற்பட அரசு அனுமதிக்கும் பட்சத்தில், நாட்டின் தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய சிறுபான்மை சமூகங்கள் அரச கட்டமைப்பின் மீதான நம்பிக்கையை முற்றாக இழப்பார்கள். இது மீண்டுமொரு சமூக ஸ்திரமின்மைக்கும் சர்வதேச அளவில் இலங்கைக்குப் பாரிய அவப்பெயருக்கும் வழிவகுக்கும்.

நாடு தற்போது சந்தித்து வரும் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளிலிருந்து மீண்டெழ வேண்டுமா யின், கடந்த காலத் தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு மதவாதச் சுவர்களையன்றி சட்டத்தின் ஆட்சியையே முதன் மையாக நிறுத்த வேண்டும்.

பௌத்த மதத்திற்கு அரசியலமைப்பில் முன்னுரிமை அளிக்கப்பட்டிருந்த போதிலும், அது சட்டத்தை மீறுவதற்கோ அல்லது குற்றமிழைத்தவர்களைப் பாதுகாப் பதற்கோ வழங்கப்பட்ட உரிமம் அல்ல.

அரசாங்கமும் தற்போதைய ஜனாதிபதியும் மகா சங்கத்தினரின் நியாயமான மத ஆசாரக் கோரிக்கைகளை மதிப்பதே அதேவேளை, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதில் எவ்வித விட்டுக்கொடுப்பிற்கும் இடமளிக் கக்கூடாது.

ஞானசார தேரர் விவகாரத்தில் மதவாத அழுத்தங் களுக்கு அரசு பணிந்துபோனால், அது பௌத்தத்தின் பெயரால் நிகழ்த்தப்படும் குற்றங்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குவதாகவே அமையும்.

பௌத்த தர்மத்தின் உண்மையான சாராம்சம் 'அகிம் சையும் நீதியுமே' அன்றி, குற்றவாளிகளைப் பாதுகாப் பதல்ல என்பதை உணர்ந்து, இலங்கை அரசு கடந்த கால வீழ்ச்சிகளை நினைவில் கொண்டு மதவாதத்தை முறி யடித்து சட்டத்தின் ஆட்சியை உறுதியுடன் நிலைநிறுத்த வேண்டும். இந்த விடயத்தில் அநுர அரசு நெகிழ்ச்சி தன்மையை காண்பிக்குமாக இருந்தால் அதுவே அதன் அதிகார வீழ்ச்சிக்கான முதலடியாக இருக்கும்.

• • •

## மயிலத்தமடு பண்ணை ... தொடர்ச்சி...

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் திரும்பி வந்துள்ளதாக பண்ணையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். அதிகாரிகள் என்னதான் செய்தாலும், எவ்வாறுதான் கதைத்தாலும், தமது மேய்ச்சல்தரைப் பகுதியில் அத்துமீறி வெளி மாவட்டங்களிலிருந்து சிங்கள மக்கள் வந்து சட்டவிரோதமான முறையில் நிலப்பகுதியை ஆக்கிரமிப்புச் செய்து பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

"நாங்கள் வாழ்வதா? எமது கால்நடைவளர்ப்பு வாழ்வாதாரத்தை மேற்கொள்வதா? என தெரியாதுள் ளதாக" அப்பகுதி கால்நடை வளர்ப்பாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் மீண்டும் நீதிமன்றத்தை நாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எரிசக்தி அதிர்ச்சிகளால்... தொடர்ச்சி...

உள்ளன, இதில் டீசல் மற்றும் பெட்ரோல் ஆகியவை பெரும் அழுத்தத்தை எதிர்கொள்கின்றன. IMF-இன் படி, உலகளாவிய எண்ணெய் இருப்புக்கள் ஒரு நாளைக்கு சுமார் 2.7 மில்லியன் பீப்பாய்கள் என்ற அளவில் குறைந்து வருகின்றன.

மேலும், ரஷ்யாவின் எண்ணெய் உட்கட்டமைப்பு கள், குறிப்பாகக் கரையோர வசதிகள் மற்றும் கருங்கடலில் உள்ள தளங்கள் மீதான உக்ரேனியத் தாக்குதல்களும், உலகளாவிய கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலிய சந்தைகள் மீதான அழுத்தத்திற்குக் கூடுதல் காரணமாக இருப்பதாக அந்த அறிக்கை குறிப்பிட்டது.

குளிர்காலத்திற்கு முன்னதாக ஐரோப்பா கூடுதல் அபாயங்களை எதிர்கொள்கிறது. தொடர்ச்சியான கோடைக்கால வெப்ப அலைகள் மற்றும் கத்தாரின் எரிசக்தி உள்கட்டமைப்பில் ஏற்பட்ட சேதம் ஆகியவை எரிவாயு விலை ஏற்ற இறக்கத்திற்குக் காரணமான காரணிகள் என சர்வதேச நாணய நிதியம் (IMF) சுட்டிக் காட்டியது. ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் போர், பொதுவாக உலகளாவிய எண்ணெய் மற்றும் திரவ இயற்கை எரிவாயு (LNG) ஏற்றுமதியில் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்டு செல்லும் பாதையான ஹோர்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்லும் கப்பல் போக்குவரத்தையும் கடுமையாகப் பாதித்துள்ளது.

அதிகரித்து வரும் அபாயங்கள் இருந்தபோதிலும், யூரோ மண்டலத்தின் வளர்ச்சி முறையே 1.1% மற்றும் 1.2% ஆக இருக்கும் நிலையில், சர்வதேச நாணய நிதியம் (IMF) 2026-ல் உலகளாவிய வளர்ச்சி 3.1% ஆகவும், 2027-ல் 3.4% ஆகவும் இருக்கும் என்று கணித்துள்ளது. உலகளாவிய பணவீக்கம் இந்த ஆண்டு 4.7%-ஐ எட்டி, அடுத்த ஆண்டு 4.1% ஆகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கரியல் வயல் பகுதியில் ... தொடர்ச்சி...

தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு கமநலசேவை நிலையப்பிரிவிற்குட்பட்ட இரணைப்பாலை, பல்லி மோட்டை கமவீதியைப் புனரமைப்புச் செய்வதற்குரிய அடிக்கல் நாட்டுவிழாவில் பங்கேற்று கருத்துத் தெரிவிக் கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

## கொழும்பு துறைமுகத்தை... தொடர்ச்சி...

(Maritime Single Window) மற்றும் துறைமுகச் சமூக அமைப்பு (Port Community System) ஆகியவற்றை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கும்.

அமெரிக்காவின் அறிவிப்பின்படி, இம்முதலீடு அமெரிக்க வர்த்தக நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதுடன், அந்நாட்டின் விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்தவும், அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக வாய்ப்புகளை விரிவுபடுத்தவும் உதவும் என கூறப்படுகின் றது.

## தொடரும் மழையால் ... தொடர்ச்சி...

ஆசிரியர்களின் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. ஆனால், இந்த அலுவலகம் ஸ்ரீபாத வித்தியாலய வளாகத்தில் அமைந்துள்ளதால், அங்குள்ள பெற்றோர்களும் பழைய மாணவர்களும் அந்த இடத்தில் அலுவலகம் அமைந் திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

நாங்கள் மக்களின் குரலுக்குச் செவிசாய்ப்பவர்கள் என்ற வகையில், அவர்களின் கருத்துகளையும் கவனத்தில் எடுத்து துள்ளோம். தற்போது தொழில் அமைச்சு மற்றும் நீதி அமைச்சு ஆகியவற்றுடன் கலந்துரையாடி, தொழில் திணைக்கள வளாகத்தில் மூன்று மாடிக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள் ளோம். எனினும், இதனை உடனடியாகச் செயற்படுத்த முடியாது. அதற்கு சில காலம் எடுக்கும்" என்றார்.

## அமெரிக்க நன்கொடையாளர் ... தொடர்ச்சி...

அடிபணிய மாட்டார் என்று கூறி, மில்பென் மோடிக்கு ஆதரவளித்துள்ளார். என்று கூறப்படும் நன்கொடை யாளர்களை அவர் அடையாளம் காட்டவில்லை, அல்லது எந்தவொரு நிதிப் பரிமாற்றங்களுக்கும் ஆதாரம் வழங்க வில்லை.

காவல்துறை நகரை முடக்கியிருந்தபோதிலும், எதிர்க்கட்சிகளின் தலைமையில் கடந்த வாரம் இந்தியத் தலைநகரில் மாபெரும் போராட்டங்கள் நடைபெற்றன. கடந்த ஆண்டு முதல், இறந்தவர்கள், இடம் பெயர்ந்தவர்கள் அல்லது கண்டுபிடிக்க முடியாதவர்கள் எனப் பதிவு செய்யப்பட்டவர்கள் உட்பட 13 கோடிக்கும் அதிகமான பெயர்களை நீக்கிய நாடு தழுவிய வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கு எதிராக, தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்று அவர்கள் கோரினர்.

## தியாக தீபம் லெப்டினன்ட் ... தொடர்ச்சி...

சட்டரீதியான நிலைப்பாட்டை கவனமாக முன் வைக்க வேண்டும்: மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமை யைக் கொண்டிருப்பதை சர்வதேசச் சட்டம் சந்தேகத்திற்கு இடமின்றி அங்கீகரிக்கிறது; ஆனால், ஒரு மக்கள் கூட்டம் சுதந்திரத்தைக் கோரும்போதெல்லாம், ஒருதலைப்பட்சமாகப் பிரிந்து செல்லும் உரிமையை அது தற்போது பொதுவான மற்றும் மறுக்க முடியாத உரிமையாக வழங்குவதில்லை. 'தீர்வளிக்கும் வகையிலான பிரிந்து செல்லுதல்' (remedial secession) குறித்த கேள்வி இன்னும் சர்ச்சைக்குரியதாகவே உள்ளது; மேலும் சர்வதேச நீதிமன்றம் அந்தச் சர்ச்சைக்குத் தெளிவான தீர்வைக் காணாமல் விட்டுவிட்டது.

இருப்பினும், அந்த நிச்சயமற்ற தன்மை தமிழ் ஈழம் தொடர்பான கேள்வியை சட்டரீதியாக அர்த்தமற்ற தாக்கிவிடவில்லை; மாறாக, ஈழத் தமிழர்கள் ஏன் ஒரு தனி 'மக்கள்' (peoplehood) என்ற அடையாளத்தைக் கோரு கிறார்கள், அக்கோரிக்கைக்கு நிலம் ஏன் முக்கியமானது, ஏன் உள்நாட்டுச் சுயநிர்ணய உரிமை போதுமானதாக இல்லை என்று வாதிடப்படுகிறது, மற்றும் ஏன் வெளிப்புறச் சுயநிர்ணய உரிமை பரிசீலனைக்குரியதாக இருக்க வேண்டும் என்று ஆதரவாளர்கள் கருதுகிறார்கள் ஆகிய வற்றை விளக்குவதன் மூலம், தமிழர்களின் இந்தக் கோரிக்கையை அதிக சட்டரீதியான தீவிரத்தன்மையுடன் முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையே அது வலியுறுத்துகிறது.

இறுதியில், 'தியாக தீபம்' லெப்டினன்ட் கேணல் திலீபனின் மரபு, உரிமைகளை வெறும் கோட்பாட்டு அளவில் கொண்டிருப்பதற்கும், அவற்றைச் செயல் படுத்தத் தேவையான அரசியல் அதிகாரத்தைக் கொண்டி ருப்பதற்கும் இடையிலான வேறுபாட்டை எதிர்கொள்ள நம்மைத் தூண்டுகிறது. சுயநிர்ணய உரிமை என்பது சர்வதேச ஒப்பந்தங்களில் இடம்பெற்றுள்ள ஒரு கருத்தி யல் சார்ந்த வெளிப்பாடு மட்டுமல்ல என்பதை அந்த ஐந்து கோரிக்கைகளும் நிரூபிக்கின்றன; நடைமுறையில் அது சுதந்திரம், நிலம், ஆட்சி, பாதுகாப்பு, கலாச்சாரம் மற்றும் ஒரு மக்கள் கூட்டம் தங்கள் எதிர்காலம் குறித்துக் கட்டுறுதிமிக்க முடிவுகளை எடுக்கும் திறன் ஆகியவற்றுடன் தொடர்புடையது. தமிழ் ஈழ ஆதரவா ளர்களைப் பொறுத்தவரை, ஒரு தனி அரசியல் எதிர் காலத்திற்கான தொடர்ச்சியான கோரிக்கையானது, இந்த அடிப்படை விவகாரங்கள் மத்திய அரசின் முடிவுகளை நிரந்தரமாகச் சார்ந்திருக்க முடியாது என்ற உறுதியான நம்பிக்கையிலிருந்து எழுகிறது; மேலும், ஒரு மக்கள் கூட்டம் தங்கள் அரசியல் நிலையைத் தீர்மானிக்கும் உரிமை என்பது, வெளிப்புற சக்திகளால் முன்கூட்டியே தீர்மானிக்கப்படாமல், ஈழத் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் உண்மையான பரிசீலனைக்கு உட்படுத்தப்படுவதையே குறிக்க வேண்டும்.

அதனால்தான், முப்பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பிறகும் 'தியாக தீபம்' லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்து கோரிக்கைகள் இன்னும் பொருத்தமானவையாகத் திகழ்கின் றன: தமிழர்களுக்கு என்ன சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மட்டும் கேட்பதோடு நின்றுவிடாமல், தமிழ்த் தாயகத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கான இறுதி அரசியல் அதிகாரம் யாரிடம் உள்ளது என்ற கேள்வியை எழுப்ப அவை நம்மைத் தூண்டுகின்றன. தமிழீழத்தை ஆதரிப்பவர்களைப் பொறுத்தவரை, அக்கேள்வியே சுயநிர்ணய உரிமையின் மையமாக அமைகிறது; ஏனெனில், ஒரு மக்கள் தங்கள் எதிர்காலத்தை எத்தகைய எல்லைகளுக்குள் கற்பனை செய்துகொள்ள அனுமதிக்கப் படுகிறார்கள் என்பதை வேறொரு அதிகார அமைப்பு நிரந்தரமாகத் தீர்மானிக்கும் சூழலில், அரசியல் சுதந்திரம் முழுமையடைய முடியாது.

• • •

## இஸ்ரேலிய ஆயுதத் ... தொடர்ச்சி...

முடிவு செய்தால், அதனால் சவுதி அரேபியா உண்மையில் என்ன ஆதாயமடையும் என்ற கேள்வியும் உண்டு.

சனா நகரில் உள்ள ஏமனின் முக்கிய எண்ணெய் நிறுவன நிலையமான 'அல்-சபாஹா'விலிருந்து (Al-Saba-ha) பொதுமக்கள் வெளியேறுமாறு சவுதி தலைமையிலான கூட்டணி எச்சரித்துள்ளது.

இன்று ஏமனில் தாக்குதலுக்குரிய குறிப்பிடத்தக்க இலக்குகள் எதுவும் இல்லை; இது சவுதிக்கு ஒரு சிக்கலாக உள்ளது. 2014 வரை, எண்ணெய் மற்றும் எரிவாயு ஆகியவை ஏமனின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகித்தன; அவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 20-30 சதவீதத்தையும், அரசின் வருவாயில் 70-80 சதவீதத்தையும் கொண்டிருந்தன, மேலும் பெரும் பகுதி ஏற்றுமதி செய்யப்பட்டது. உற்பத்தி ஒரு நாளைக்கு 400-450 ஆயிரம் பீப்பாய்கள் என்ற உச்சத்தை எட்டியிருந்தது.

ஆனால் இன்று அது 20 ஆயிரம் பீப்பாய்களைக் கூட அரிதாகவே தாண்டுகிறது. சவுதியின் எச்சரிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக, ஏமனின் ஹூதிகள், சவூதி எண் ணெய் நிலையங்கள் மற்றும் விமான நிலையங்களில் உள்ள அனைத்துத் தொழிலாளர்களையும் வெளியேறுமாறு மீண்டும் எச்சரித்துள்ளனர்.

இது ஒரு சாதாரணப் போர் அல்ல. இது பெட் ரோடாலர்களின் இதயத்திற்கு எதிரான ஒரு போர். பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானின் மிகப்பெரிய அச்சம் மெய்யாகி வருகிறது: அது பொருளாதார மற்றும் நற்பெயர் மீதான பாதிப்பு. அரசாங்கம் நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள ஒரு தருணத்தில் இந்தத் தாக்குதல்கள் நடந்துள்ளன; அரசாங்கம் பற்றாக்குறை கணிப்புகளையும் வரவு செலவுத் திட்டச் சுருக்கத்தையும் சந்தித்து வருகிறது. விமான நிலையங்கள் மூடப்பட்டிருப்பதையும், தலைநகர் மீது புகை சூழ்ந்திருப்பதையும் காண்பது, 'விஷன் 2030' நவீனமயமாக்கல் உத்தியின் தூண்களான சுற்றுலாவையும் வெளிநாட்டு மூலதனத்தையும் விரட்டியடிக்கிறது.

எனவேதான் ஏமனில் உள்ள இரண்டு எரிபொருள் கிடங்குகள் மீதான சவூதியின் குண்டுவீச்சு, எதிர்பார்த்ததை விட மிகவும் குறைவான தீவிரத்துடன் இருந்தது. அதேபோல், அராம்கோ நிறுவனத்திற்கு எதிரான ஹூதிகளின் பதிலடியும் ஒரு அடையாளமாகவே இருந்தது.

ஏனெனில், இந்தப் பிராந்தியத்தில் போரை முடிவுக் குக் கொண்டுவர, இரு தரப்பினரும் டிரம்ப் பேச்சுவார்த்தை மேசையில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

மேலும், ஈரானுக்குச் சலுகைகள் வழங்குவதன் மூலமாகவோ அல்லது போரை மீண்டும் தொடங்குவதன் மூலமாகவோ, டிரம்ப் இதுவரை செய்து வந்ததிலிருந்து மாறுபட்ட ஒன்றைச் செய்ய நிர்பந்திக்கப்படலாம் என்ப தையே இந்த மோதல்கள் காட்டுகின்றன.

• • •

## பெண் குழந்தைகளின்... தொடர்ச்சி...

யுரிமை பாதுகாக்கப்பட வேண்டும். அவளது பெயர், புகைப்படம் அல்லது தனிப்பட்ட தகவல்களைப் பரப்பு வது அவளுக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்பதால், ஊடகங்களும் பொதுமக்களும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்.

### உயிர்களைக் காக்கும் உளவலுவூட்டல்

சமரழகியையும் இலக்கியாவையும் இழந்த துயரத்தை எந்தச் சொல்லாலும் ஈடுசெய்ய முடியாது. அவர்களின் மரணங்களுக்கான சூழல்கள் முறையாக ஆராயப்பட வேண்டும். அதேவேளை, ஒவ்வொரு மரணத்துக்குப் பின்னரும் துயரத்தை வெளிப்படுத்திவிட்டு அடுத்த நிகழ்வுக்காகக் காத்திருக்கும் சமூகமாக நாம் தொடர முடியாது. ஒரு குழந்தை தன்னுடைய வலியைத் தனியாகச் சுமக்க வேண்டியதில்லை என்ற நம்பிக்கையை உருவாக்க வேண்டும். தற்கொலை எண்ணங்களுடன் போராடும் குழந்தைகள் பலவீனமானவர்கள் என்று கருதாமல், உடனடியாக நம்பகமான பெரியவர்களின் உதவியையும் உரிய மருத்துவ அல்லது உளவியல் ஆதரவையும் பெறச் செய்ய வேண்டும்.

பெண் குழந்தைகள் தமது கனவுகளைத் தொடரவும், அச்சமின்றிப் பேசவும், வன்முறையிலிருந்து பாதுகாக்கப்படவும், நெருக்கடிகளிலிருந்து மீண்டு வாழ வும் ஏற்ற உலகை உருவாக்குவதற்கான பொறுப்பை நாம் நினைவில்கொள்ள வேண்டும். விண்வெளியை வெல்லும் ஆற்றல் கொண்ட பெண் குழந்தைகளை உருவாக்குவது மட்டுமல்ல, வாழ்க்கையின் இருண்ட தருணங்களில் அவர்களுக்குக் கைகொடுத்து மீண்டும் எழச் செய்வதும் எமது கடமை. ஒரு பெண் குழந்தையின் உயிர் பாதுகாக்கப்படுவதும், அவளது கண்ணியம் மதிக்கப் படுவதும், அவளது எதிர்காலம் அவளுக்குச் சொந்தமான தாக இருப்பதும்தான் உண்மையான சமத்து வத்தின் அடையாளம்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# சிறுவர் ஆக்கம்

செ.தச்சாயினி
பாலையூற்று



## கானல்



தொலைவில் தெரியுது
நீரலை,
அருகில் போனால் வெறும்
நிலை.

தாகம் கொண்ட மான் போல,
உன்னை தேடி ஓடினேன்
நான் போல.

தொட்டுவிட துடிக்கும்
கைக்கு,
எட்டாமல் போகும் வெளிக்கு,
பெயர் தான் கானலோ?

நீயும் அப்படித்தான்,
கண்ணுக்கு தெரிஞ்ச வரம்,
கைக்கு கிடைக்காத கனவு....

சு.திகழினி
கன்னியா

## கவிஞர்



எழுத்தை விற்பவன் அல்ல
அவன்,
எண்ணத்தை விதைப்பவன்.

கண்ணீரை கண்டால்,
மையாக்கி கொள்வான்;
காதலை கண்டால்,
கவியாக்கி தருவான்.

ஊர் தூங்கும் நள்ளிரவில்
முழிப்பான்,
உணர்வுகளுக்கு உயிர்
கொடுப்பான்....

சொல்லில் உயிர் வைப்பவன்,
சோகத்திலும் சுகம் தருபவன்.
தனக்கென அழாமல்,
பிறர்க்கென அழுபவன்.
ஒரு வரியில் வாழ்க்கையை,
உணர்த்துபவன்,
அவன் தான் கவிஞர்....

சு.சாந்தினி
கன்னியா

## ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது



கானல்புரம் எனும் ஊரில் எட்டு வயது சின்ன பையன் ஒருவன் இருந்தான், அவன் பெயர் கந்தன்.

அவன் பள்ளிக்கு செல்லும் வயதில் அவனுடைய அப்பா தினமும் காலையில் ஐந்து மணிக்கு எழுந்து படிக்க சொல்வார். ஆனால் கந்தன் கேட்க மாட்டான். "பிறகு படிக்கலாம், சின்ன பையன் தானே"னு தூங்கிடுவான்.

அப்பா சொல்வார், "டேய், ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதுடா. இப்போ பழகுனா தான் பின்னாடி உதவும்." என்று அவன் அதை அப்படியே அலட்சியப்படுத்திவிட்டான்.

வருடங்கள் கழிந்தன. கந்தனுக்கு 25 வயசு. வேலைக்கு போகணும். ஆனா காலையில எழுந்திருக்கவே முடியவில்லை. இதனால் ஒரு வேலையிலும் நிலைக்க முடியவில்லை. அதனால் மிகவும் கஷ்டப்பட்டான்.

அப்போ தான் அவனுக்கு புரிந்தது. அப்பா சொன்ன அந்த பழமொழியோட அர்த்தம்.

சிறு வயதில் கற்றுக்கொள்ளும் பழக்கம் தான் பெரிய வயதிலும் எம்மை வழிநடத்தும். மூங்கிலை சின்னதா இருக்கும் போதே வளைக்கணும், பெரிதானபின் வளைக்க முடியாது. ஆகவே நல்ல பழக்கங்களை சிறு வயதிலேயே பழகி விடவேண்டும். அப்பொழுது தான் வாழ்க்கை அழகாக அமையும்.

ம.துலக்சனா
விளாங்குளம்




# தாயகமும் வாழ்வும்

